மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கை 2025

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

இலங்கை

2025 ஒக்டோபர் 31 ஆம் திகதி

மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கை - 2025

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் 50 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது.

அனுர குமார திசாநாயக்க
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்

2025 ஒக்டோபர் 31 ஆம் திகதி

மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கை

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் 50 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கௌரவ அமைச்சரினால் வெளியிடப்பட்டது

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் 50 ஆம் பிரிவின் நியதிகளின்படி, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர், மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கையை உரிய ஆண்டின் ஒக்டோபர் மாதத்தின் இறுதி நாளுக்குள் அல்லது குறித்த ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்ட திகதியிலிருந்து பத்து மாதங்கள் கழிந்த திகதியிலிருந்து, எது பிந்தியதோ அத்திகதியில் பொதுமக்களுக்கு சமர்ப்பிப்பதோடு, அதன்பின் பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்க வேண்டும்.

அரசாங்கத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதன் அரசிறை மூலோபாயத்திற்கு எதிராக அதன் மத்திய ஆண்டு அரசிறைச் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கு பொதுமக்களுக்கு ஒரு அடிப்படையை வழங்குவதே இந்த அறிக்கையின் நோக்கமாகும்.

அறிக்கையின் உள்ளடக்கமானது 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களின் அரசாங்கத்தின் வருமானம், செலவினம், காசுப்பாய்ச்சல் செயற்பாடுகள் மற்றும் கடன் பெறுகைகளின் செயலாற்றுகைகளைக் கொண்டுள்ளது. மேலும் இவ்வறிக்கை 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான தற்காலிக வரவு செலவுத்திட்டத்தின் வெளிப்பாடு, பேரினப் பொருளாதார செயற்திறன்கள், விலை மேம்பாடுகள், வெளிநாட்டு நிதி, அரசாங்கத்தின் படுகடன், உத்தியோகபூர்வ இருப்புக்கள் மற்றும் அரசுடமை வணிக நிறுவனங்களின் செயலாற்றுகைகளை கிடைத்த தகவல்களுக்கேற்ப இற்றைப் படுத்தப்பட்டு வழங்குகின்றது.

பொருளடக்கத்தின் அட்டவணை

பக்கம்

அத்தியாயம் 1 பொருளாதாரப் பார்வை

1.1	மேன்நோக்கு	1
1.2	பணவீக்கம்	3
1.3	பணம் மற்றும் கடன்	3
1.4	பங்குச் சந்தை	4
1.5	வெளிநாட்டுத் துறையின் அபிவிருத்திகள்	5
1.6	உலகளாவிய பொருளாதார முன்நோக்குகள்	8
1.7	உலக வர்த்தகம்	9
1.8	நாணயம் மற்றும் நிதியியல் துறை	10

அத்தியாயம் 2 அரசிறை அபிவிருத்திகள்

2.1	மேன்நோக்கு	11
2.2	அரசாங்க வருமானம்	13
2.3	அரசாங்க செலவினம்	26
2.4	பொது திறைசேரியின் காசுப்பாய்ச்சல் செயலாற்றுகை	32
2.5	அரச படுகடன் முகாமைத்துவம்	33

அத்தியாயம் 3 அரசுடைமை தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை

3.1	மேன்நோக்கு	36
3.2	அரசுக்கு சொந்தமான பிரதான பத்து வணிக தொழில்முயற்சி நிறுவனங்கள் பற்றிய மதிப்பாய்வு	36

அத்தியாயம் 4 வெளிநாட்டு நிதியளிப்பு

4.1	மேன்நோக்கு	43
4.2	வெளிநாட்டு நிதியுதவி உறுதிமொழிகள்	43
4.3	வெளிநாட்டு நிதி வழங்கல் மற்றும் பயன்பாடு	43
4.4	வெளிநாட்டு கடன் இருப்பு மற்றும் வெளிநாட்டு கடன் சேவைக் கொடுப்பனவுகள்	44

பிரதான பொருளாதார குறிகாட்டிகள்

குறிகாட்டிகள்	காலம்	அலகு	பெறுமதி	
			2024	2025 (தற்காலிகம்)
மெய்த்துறை				
பொருளாதார வளர்ச்சி	முதல் அரையாண்டு	%	4.6	4.8
விவசாயம்	முதல் அரையாண்டு	%	1.8	0.6
கைத்தொழில்	முதல் அரையாண்டு	%	10.5	7.9
சேவைகள்	முதல் அரையாண்டு	%	2.3	3.3
பணவீக்கம் ஆண்டுக்காண்டு (CCPI 2021=100)	ஜுன் மாத இறுதியில்	%	1.7	-0.6
வேலையின்மை வீதம்	முதலாம் காலாண்டு	%	4.5	3.8
தொழிற்படை பங்கேற்பு வீதம்	முதலாம் காலாண்டு	%	47.1	49.7
அரசிறைத் துறை				
வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை	சன – ஜுன்	ரூபா. பில்	599	406
மொத்த வருமானம்	சன – ஜுன்	ரூபா. பில்	1,861	2,322
வரி வருமானம்	சன – ஜுன்	ரூபா. பில்	1,709	2,152
வரியல்லா வருமானம்	சன – ஜுன்	ரூபா. பில்	151	170
மொத்த செலவினம்	சன – ஜுன்	ரூபா. பில்	2,463	2,731
மீண்டெழும் செலவினம்	சன – ஜுன்	ரூபா. பில்	2,218	2,507
அரசாங்க முதலீடு	சன – ஜுன்	ரூபா. பில்	258	228
அரசாங்கப் படுகடன்	ஜுன் மாத இறுதியில்	ரூபா. பில்	28,563	29,635
வெளிநாட்டுத் துறை				
ஏற்றுமதிகள்	சன – ஜுன்	ஐ.அ.டொ.மில்.	6,144	6,492
அதில் விவசாய ஏற்றுமதிகள்	சன – ஜுன்	ஐ.அ.டொ.மில்.	1,281	1,428
கைத்தொழில் ஏற்றுமதிகள்	சன – ஜுன்	ஐ.அ.டொ.மில்.	4,837	5,045
புடவை மற்றும் ஆடைகள்	சன – ஜுன்	ஐ.அ.டொ.மில்.	2,408	2,606
ஏனையவை	சன – ஜுன்	ஐ.அ.டொ.மில்.	2,429	2,439
இறக்குமதிகள்	சன – ஜுன்	ஐ.அ.டொ.மில்.	8,684	9,762
நுகர்வுப் பொருட்கள்	சன – ஜுன்	ஐ.அ.டொ.மில்.	1,534	2,316
இடைநிலைப் பொருட்கள்	சன – ஜுன்	ஐ.அ.டொ.மில்.	5,634	5,576
அதில் பெற்றோலிய உற்பத்திகள்	சன – ஜுன்	ஐ.அ.டொ.மில்.	2,209	1,996
முதலீட்டுப் பொருட்கள்	சன – ஜுன்	ஐ.அ.டொ.மில்.	1,511	1,863
வர்த்தக மீதி	சன – ஜுன்	ஐ.அ.டொ.மில்.	-2,540	-3,270
உல்லாசப் பயணிகளின் வருகை	சன – ஜுன்	எண்ணிக்கை	1,010,249	1,168,044
சுற்றுலாத் துறை வருமானம்	சன – ஜுன்	ஐ.அ.டொ.மில்.	1,557	1,713
தொழிலாளர் பணவனுப்பல்கள்	சன – ஜுன்	ஐ.அ.டொ.மில்.	3,144	3,738
மொத்த சென்மதி நிலுவை	சன – ஜுன்	ஐ.அ.டொ.மில்.	1,761	523
மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்	ஜுன் மாத இறுதியில்	ஐ.அ.டொ.மில்.	5,654	6,081
செலாவணி வீதம் (இறுதி மாதம்)	ஜுன் மாத இறுதியில்	ஐ.அ.டொ. இற்கான ரூபா	305.7	299.9
செலாவணி வீதம் (மாதாந்த சராசரி)	சன – ஜுன்	ஐ.அ.டொ. இற்கான ரூபா	303.8	299.9
நாணயத்துறை				
துணைநில் வைப்பு வசதி வீதம் (SDFR)	ஜுன் மாத இறுதியில்	%	8.50	7.25
துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் (SLFR)	ஜுன் மாத இறுதியில்	%	9.50	8.25
நியதிச்சட்ட ஒதுக்கு தேவைப்பாடு (SRR)	ஜுன் மாத இறுதியில்	%	2.00	2.00
வர்த்தக வங்கிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி புதிய கடன் வீதம் (AWNLR)	ஜுன் மாத இறுதியில்	%	11.45	10.28
வர்த்தக வங்கிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி கடன் வீதம் (AWLR)	ஜுன் மாத இறுதியில்	%	12.47	11.56
திறைசேரி உண்டியல்களின் விளைவு வீதம் (91 நாட்கள்)	ஜுன் மாத இறுதியில்	%	10.07	7.55
திறைசேரி உண்டியல்களின் விளைவு வீதம் (364 நாட்கள்)	ஜுன் மாத இறுதியில்	%	10.31	7.94
நாணய வழங்கல் வளர்ச்சி (M_2b)	ஜுன் 2025/ ஜுன் 2024	%	9.8	10.4
தனியார் துறை கடன் வளர்ச்சி	ஜுன் 2025/ ஜுன் 2024	%	6.2	17.9

இலங்கை : தெரிவு செய்யப்பட்ட சுட்டிகள்

குறிகாட்டிகள்	காலம்	அலகு	பெறுமதி
மின்சாரம்			
மின் விநியோக மட்டம்	2016	%	99.3
நீர்			
பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதற்கான அடைவு	2024	சனத்தொகை %	98.8
குழாய் நீரைப் பெறுவதற்கான அடைவு	2024	சனத்தொகை %	63.1
வீதிகள்			
வீதி அடர்த்தி	2024	கி.மீ / சதுர கி.மீ.	0.19
வீதிகளின் மொத்த நீளம்	2024	கி.மீ.	1 44,975
தொடர்பாடல்			
செல்லிடத் தொலைபேசி உள்ளடங்கலாக தொலைபேசிக்கான அடர்த்தி	2024	ஒவ்வொரு 100 பேருக்கு	141.2
இணையத்தளத்திற்கான அடைவு	2024	ஒவ்வொரு 100 பேருக்கு	105.6
கல்வி			
பொதுக் கல்வி			
ஆரம்ப பாடசாலைகளில் இணையும் விகிதம்	2024	%	83.1
மாணவர் / ஆசிரியர் விகிதம் (அரசாங்க பாடசாலைகள்)	2024	எண்ணிக்கை	16.3
எழுத்தறிவு வீதம் (சராசரி)	2023	%	93.2
கணினி அறிவு வீதம் (முதல் 06 மாதங்கள்)	2024	%	36.4
பல்கலைக்கழக கல்வி			
மாணவர் / ஆசிரியர் விகிதம்	2024	எண்ணிக்கை	23.0
வயது அடிப்படையில் இணையும் விகிதம் (வயது 19 - 22 வருடங்கள்) [(அ)]	2024	%	9.9
சுகாதாரம்			
வைத்தியசாலைகள் (மேற்கத்தேய மருத்துவம்)	2023	எண்ணிக்கை	649
கட்டில்கள்	2023	எண்ணிக்கை	90,392
வைத்தியசாலை கட்டில்கள்	2023	ஒவ்வொரு 1,000 பேருக்கு	4.1
நபர்களுக்கான வைத்தியர்	2023	எண்ணிக்கை	985
சனத்தொகை			
சனத்தொகை அடர்த்தி	2024	சதுர கி.மீ. ஆட்கள்	352
சனத்தொகை வளர்ச்சி	2023	%	-0.6
ஆயுள் எதிர்பார்க்கை	2017	வருடங்கள்	75.5
சிசு மரண வீதம்	2020	1000 பிறப்புகளுக்கு	6.4
தாய் மரண வீதம்	2022	1000 பிறப்புகளுக்கு	22.6
செப்பமற்ற பிறப்பு வீதம்	2024	ஒவ்வொரு 1000 பேருக்கு	10.1
செப்பமற்ற இறப்பு வீதம்	2024	ஒவ்வொரு 1000 பேருக்கு	7.8
தங்கி வாழ்வோர் வீதம்	2024	%	49.5
வறுமை			
தலைக்குரிய வறுமைச் சுட்டெண்	2019	%	14.3
குடும்ப அலகுகளின் வருமான கினி குணகம்	2019	குணகம்	0.46
வறுமை இடைவெளி	2019	%	2.8
நாளாந்தம் உட்கொள்ளும் சராசரி கலோரிப் பெறுமானம்	2019	கிலோ கலோரிகள்	2,120
சர்வதேச தரப்படுத்தல்			
மனித அபிவிருத்தி சுட்டெண்	2023	193 நாடுகளின் தரப்படுத்தலில்	78
ஊழல் புரிதல் சுட்டி	2024	180 நாடுகளின் தரப்படுத்தலில	121
உலகளாவிய போட்டித் தன்மை சுட்டெண்	2019	141 நாடுகளின் தரப்படுத்தலில்	84
பொருளாதார சுதந்திர சுட்டெண்	2024	184 நாடுகளின் தரப்படுத்தலில்	148
உலகளாவிய சமாதான சுட்டெண்	2024	163 நாடுகளின் தரப்படுத்தலில்	100
இலத்திரனியல் - ஆட்சிமுறை அபிவிருத்தி சுட்டெண்	2024	193 நாடுகளின் தரப்படுத்தலில்	98

(அ) மாணவர்களின் உள்விழைவினை மாத்திரம் உள்ளடக்குகின்றது

அத்தியாயம் 1

பொருளாதாரப் பார்வைகள்

1.1 மேன்நோக்கு

இலங்கையின் பொருளாதாரமானது விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் வரிக்குறைப்பு உதவுதொகைகள் என்பன உள்ளடங்கலாக அனைத்து பொருளாதார துறைகளினதும் விரிவாக்கத்தில் இருந்து நன்மைபெற்று, 2024 இன் முதலரைப் பகுதியின் 4.6 சதவீதம் கொண்ட விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப் பகுதியில் 4.8 சதவீதத்தினால் விரிவடைந்தது. 11 மாதங்களைக் கொண்ட தொடர்ச்சியான பணச்சுருக்கத்தைத் தொடர்ந்து, முதன்மைப் பணவீக்கமானது ஆண்டுக்காண்டு 2025 ஆகஸ்டில் சாதகமான புலத்தினுள் பிரவேசித்து 2025 ஆகஸ்ட்டில் 1.2 சதவீதத்தில் இருந்து 2025 செப்டெம்பரில் 1.5 வீதத்திற்கு அதிகரித்தது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், 2025 ஆகஸ்ட் இறுதியளவில் ஐ.அ டொலர் 6.2 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இலங்கை ரூபா பரந்தளவில் நிலையாகக் காணப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வரி விகிதம் 2023 இன் 9.9 சதவீதத்தில் இருந்து 2024 இல் 12.4 சதவீதமாக 2.5 சதவீதப் புள்ளிகளால் அதிகரித்தது, வருவாய் அடிப்படையிலமைந்த அரசிறைத் திரட்டல் செயல்முறையிலிருந்து பயனளிக்கத் தொடங்கியுள்ளது. வருவாய் சேகரிக்கும் முகவராண்மைகளின் ஊழல் பாதிக்கப்படத்தக்க தன்மையினைக் குறைப்பதை நோக்கி முன்னெடுக்கப்படும் டிஜிட்டல் மயமாக்கல் மேம்பாடு மற்றும் வரி நிர்வாக முயற்சிகள் என்பன மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வரி விகிதம் 2025 இல் 14.8 சதவீதமாக உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையை பெருமளவில் இறுதிசெய்தமை படுகடன் நிலைபெறுதன்மையினை மீளமைப்பதை நோக்கிய பாதையொன்றினை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது விரிவடைகின்ற வர்த்தகப் பற்றாக்குறைக்கு மத்தியில் சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பலில் இருந்து கிடைத்த அதிகரித்த உட்பாய்ச்சல் மூலம் துணையளிக்கப்பட்டு, 2025 சனவரி – ஓகஸ்ட் மாத காலப்பகுதியில் தாக்குப்பிடிக்கத்தக்கதாக விளங்கியது. சேவைத் துறைகளிலிருந்து பயனடைந்து, நடைமுறைக் கணக்கு மிகைகளை பதிவுசெய்தது.

2024 செப்டெம்பரில் பொதுத் தேர்தலின் பின்னர் நாட்டின் பொருளாதார உறுதிப்பாடு உறுதிப்படுத்தப்பட்டதைப் பிரதிபலித்து இலங்கை தவணைதவறுதலிலிருந்து உத்தியோகபூர்வமாக மீண்டது. இலங்கையின் கடன் தரப்படுத்தல்கள் பிட்ச், மூடிஸ் மற்றும் எஸ் அன்ட் பி நிறுவனங்களினால் தரமுயர்த்தப்பட்டுள்ளன. இலங்கையின் நீண்டகால வெளிநாட்டு நாணய சர்வதேச தவணைதவறுதல் தரப்படுத்தலை “RD” (மட்டுப்படுத்தப்பட்ட தவணை தவறுதல்) இலிருந்து 'CCC+' ஆக பிட்ச் ரேடிங் தரமுயர்த்தியது. மூடிஸ் இன்வெஸ்டர் சேவிஸ் அதன் நீண்டகால நாணய வழங்குநர் தரப்படுத்தலை'Ca' இலிருந்து 'Caa1' ஆக தரமுயர்த்தியது. எஸ் அன்ட் பி குளோபல் ரேடிங்ஸ் இலங்கையின்நீண்டகால மற்றும் குறுகியகால வெளிநாட்டு நாணய தரப்படுத்தல்களை 'SD/SD' இலிருந்து to 'CCC+/C' ஆக உயர்த்தியது. அதேவேளை, அரசாங்கமானது நிறுவனசார் மறுசீரமைப்புகளை பேணுகின்ற அதேவேளை, பொருளாதாரத்தின் கட்டமைப்பு சார்ந்த முட்டுக்கட்டைகளுக்கு தீர்வுகாணும் பொருட்டு மையப்படுத்திய ஊழல் எதிர்ப்பு முயற்சியொன்றை முன்னெடுக்கின்றது. இது நடுத்தரகாலம் மீது இலங்கையின் வளர்ச்சி வாய்ப்புகளுக்கு சந்தர்ப்பமளிப்பதற்கு உறுதியான பொருளாதார வளர்ச்சிக்கான உள்ளீட்டினை வழங்கும்.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி மூலம் ஆதரவளிக்கப்படும் பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சிதிட்டத்திற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. இலங்கைக்கான நான்கு ஆண்டு விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் நான்காவது மீளாய்வு 2025 யூலை 01 அன்று வெற்றிகரமாக நிறைவுபெற்றது. சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் ஐந்தாவது மீளாய்வு மேற்கொள்ளப்பட்டுவருவதுடன் 2025 டிசெம்பர் அளவில் ஐ.அ.டொலர் 347 மில்லியன் கொண்ட எதிர்பார்க்கப்பட்ட பகிர்ந்தளிப்புகளுடன் 2025 ஒக்டோபர் அளவில் மீளாய்வை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளும் 2025 இன் முதலரைப்பகுதியில் மேம்பட்டுள்ளன. விவசாயத்துறையானது பிரதானமாக நெற்பயிர், கடல்சார் மீன்பிடி மற்றும் கடல்சார் நீர்வளங்கள் மற்றும் மிருக உற்பத்தி என்பவற்றின் வளர்ச்சியின் விரிவடைதல் காரணமாக 0.6 சதவீதத்தினால் சிறிதளவு வளர்ச்சியடைந்தது. தயாரிப்பு, கட்டடவாக்கம், சுரங்கம் மற்றும் கல்லுடைத்தல் என்பவற்றில் பதிவாகிய குறிப்பிடத்தக்க வளர்ச்சியின் பிரதான காரணமாக கைத்தொழிற்றுறை 2025 இன் முதலரைப்பகுதியில் 7.9 சதவீதத்தினால் வளர்ச்சியுற்றது. பணிகள் துறையும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து, நிதியியல் சேவை நடவடிக்கைகள் என்பவற்றில் விரிவடைதல் காரணமாக 2025 இன் முதலரைப்பகுதியில் 3.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, வரிகள் மற்றும் குறைவான உதவுதொகைகள் துணைத்துறை 10.6சதவீதத்தினால் அதிகரித்து விவசாயத்துறையிலிருந்து கிடைத்த 8.8 சதவீதம் கொண்ட பங்களிப்பினை விஞ்சி, பொருளாதாரத்திற்கான பங்களிப்பை எடுத்துக் காட்டியது.

தொடர்ச்சியாக 11 மாதகால பணச்சுருக்கத்தின் பின்னர் முதன்மைப் பணவீக்கம் 2025 ஆகஸ்ட்டில் நேர்கணியப் புலத்திற்குள் பிரவேசித்தது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் (2021 = 100) ஆண்டுக்காண்டு மாற்றத்தினால் அளவிடப்படுகின்றவாறான முதன்மைப் பணவீக்கம், ஏறத்தாள ஒரு ஆண்டு பணச்சுருக்கத்தின் பின்னர் 2025 ஆகஸ்டின் 1.2 சதவீதத்திலிருந்து 2025 செப்டெம்பரில் 1.5 சதவீதமாக அதிகரித்தது. உணவு பணவீக்கம் (ஆண்டுக்காண்டு) 2025 செப்டெம்பரில் 2.9 சதவீதமாக உயர்வடைந்ததுடன் உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டுக்காண்டு) 0.7 சதவீதமாகக் காணப்பட்டது. பொருத்தமான கொள்கை ஆதரவுடன் வரவிருக்கும் காலப்பகுதியில் பணவீக்கம் படிப்படியாக அதிகரித்து, 5.0 சதவீதம் கொண்ட பணவீக்க இலக்கினை நோக்கி நகருமென எறிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. அதேவேளை, பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்க போக்குகளை பிரதிபலிக்கின்ற மையப்பணவீக்கம் (ஆண்டுக்காண்டு) 2025 செப்டெம்பரில் 2.0 சதவீதத்தில் காணப்பட்டது.

உள்நாட்டு மற்றும் உலகளாவிய பக்கங்கள் இரண்டிலும் காணப்படும் அபிவிருத்தியினை உரியவாறு பரிசீலித்து, இலங்கை மத்திய வங்கி, கொள்கை வட்டிவீதமான ஓரிரவுக் கொள்கை வீதத்தை 2025 செப்டெம்பரில் 7.75 சதவீதம் கொண்ட மட்டத்தில் பேணியது. 2024 நவம்பர் 27 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வட்டிவீதமாக ஓரிரவுக் கொள்கைவீதம் நிர்ணயிக்கப்பட்டதுடன் துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதிவீதமும் இலங்கை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்டவாறான எல்லையொன்றுடன் ஓரிரவுக் கொள்கை வீதத்திற்கு இணைக்கப்பட்டன. இலங்கை மத்திய வங்கியானது அதன் ஓரிரவுக் கொள்கை வீதத்தை 7.75 சதவீதமாக முன்னெடுத்த அதேவேளை, துணைநில் வைப்புவசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வீதமும் முறையே 7.25 சதவீதமாகவும் 8.25 சதவீதமாகவும் காணப்பட்டன. தற்போதைய நாணயக் கொள்கை நிலை வரவிருக்கும் காலப்பகுதியில் 5.0 சதவீதம் கொண்ட பணவீக்க இலக்கிடலை எய்துகின்ற அதேவேளை, பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பங்குச் சந்தை, 2025 யூன் இறுதியில் 18,027 புள்ளிகளாக (ஆண்டுக்காண்டு) 48.4 சதவீதத்தினால் அனைத்து பங்குவிலைச் சுட்டெண்ணின் (1985 = 100) அதிகரிப்புடனும் ஸ்ராண்டட் அன்ட் புவர்ஸ் ஸ்ரீலங்கா 20 சுட்டெண் (S&P SL20 , 2004 = 1000) 5,353 புள்ளிகளுடனும் (ஆண்டுக்காண்டு) 49.2 சதவீதங்களால் மேம்பட்ட செயலாற்றத்தினை காண்பித்தது.

வெளிநாட்டு துறையானது 2025 இன் முதல் எட்டு மாதங்களில் மேம்பட்ட செயலாற்றத்தினைக் காண்பித்தது. வணிகப்பொருள் ஏற்றுமதிகள் 2024 இன் அதே காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 8.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதல் எட்டு மாதங்களின் ஐ.அ.டொலர் 9.1 பில்லியனாக 6.7 சதவீதத்தினால் அதிகரித்தன. வணிகப்பொருள் இறக்குமதிகள, 2024 இன் அதேகாலப்பகுதியின் ஐ.அ.டொலர் 12.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதல் எட்டு மாதங்களின் ஐ.அ.டொலர் 13.3 பில்லியனாக 10.5 சதவீதத்தினால் அதிகரித்தன. இதன் விளைவாக வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறை 2024 இன் அதேகாலப்பகுதியின் ஐ.அ.டொலர் 3.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதல் எட்டு மாதங்களின் ஐ.அ.டொலர் 4.3 பில்லியனாக விரிவடைந்தது

அட்டவணை 1.1 பணவீக்க அசைவுகள் (%)

வருடம்	மாதம்	கொ.நு.வி.சு.				தே.நு.வி.சு.			
		முதன்மை பணவீக்கம்		மையப்* பணவீக்கம்		முதன்மை பணவீக்கம்		மையப்* பணவீக்கம்	
		புள்ளிக்குப் புள்ளி	ஆண்டுச் சராசரி	புள்ளிக்குப் புள்ளி	ஆண்டுச் சராசரி	புள்ளிக்குப் புள்ளி	ஆண்டுச் சராசரி	புள்ளிக்குப் புள்ளி	ஆண்டுச் சராசரி
2024	சனவரி	6.4	14.2	2.2	11.3	6.5	13.4	2.2	12.3
	பெப்ரவரி	5.9	11.3	2.8	8.5	5.1	10.2	2.7	9.2
	மார்ச்	0.9	8.0	3.1	6.1	2.5	7.2	3.4	6.5
	ஏப்பிரல்	1.5	5.7	3.4	4.4	2.7	5.2	3.0	4.6
	மே	0.9	3.9	3.5	3.3	1.6	3.7	3.1	3.3
	யூன்	1.7	3.1	4.4	2.8	2.4	3.0	3.9	2.7
	யூலை	2.4	2.8	4.4	2.7	2.5	2.9	3.0	2.5
	ஆகஸ்ட்	0.5	2.5	3.6	2.7	1.1	2.8	2.3	2.3
	செப்டெம்பர்	-0.5	2.4	3.3	2.8	-0.2	2.7	1.9	2.3
	ஒக்டோபர்	-0.8	2.2	3.0	2.9	-0.7	2.5	1.7	2.4
	நவம்பர்	-2.1	1.7	2.7	3.1	-1.7	2.2	1.5	2.5
	திசெம்பர்	-1.7	1.2	2.7	3.3	-2.0	1.6	1.3	2.5
2025	சனவரி	-4.0	0.4	1.2	3.2	-4.0	0.7	-0.2	2.3
	பெப்ரவரி	-4.2	-0.5	0.7	3.0	-3.9	0.0	-0.6	2.0
	மார்ச்	-2.6	-0.8	0.7	2.8	-1.9	-0.4	-0.6	1.7
	ஏப்பிரல்	-2.0	-1.1	0.8	2.6	-0.8	-0.7	-0.1	1.4
	மே	-0.7	-1.2	1.2	2.4	0.6	-0.8	0.3	1.2
	யூன்	-0.6	-1.4	1.5	2.1	0.3	-0.9	0.6	0.9
	யூலை	-0.3	-1.6	1.6	1.9	0.7	-1.1	0.9	0.7
	ஆகஸ்ட்	1.2	-1.5	2.0	1.8	1.5	-1.0	1.5	0.7

மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

**கொ.நு.வி.சு.மற்றும் தே.நு.வி.சு அடிப்படையில் பணவீக்கம் (அடிப்படை ஆண்டு 2021=100) - மாறுபடும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து நீங்கலாக*

தொழிலாளர் பணவனுப்பல்கள் 19.3 சதவீதத்தினால் அதிகரித்தன. 2024 இன் அதேகாலப்பகுதியில் பதிவாகிய ஐ.அ.டொலர் 4.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதல் எட்டு மாதங்களின்போது ஐ.அ.டொலர் 5.1 பில்லியனை எட்டின.தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் சுற்றுலாத்துறையிலிருந்தான[1] வருவாய்களும் . 2024 இன் அதேகாலப்பகுதியில் பதிவாகிய ஐ.அ.டொலர் 2.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2.3 பில்லியனாக 5.7 சதவீதத்தினால் அதிகரித்தன. சேவைகள் துறை தேறிய உட்பாய்ச்சல்கள், 2024 இன் அதேகாலப்பகுதியில் பதிவாகிய ஐ.அ.டொலர் 2.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதல் எட்டு மாதங்களின்போது ஐ.அ.டொலர் 2.7 பில்லியனை எட்டின.

2025 ஓகஸ்ட் இறுதியளவில், படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மத்தியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், சீன மக்கள் வங்கியுடனான பரஸ்பர பரிமாற்ற ஒப்பந்த வசதி உள்ளடங்கலாக ஐ.அ.டொலர் 6.2 பில்லியனாகக் காணப்பட்டன. 2025 செப்டெம்பர் இறுதியிலுள்ளவாறு ஐ.அ.டொலருக்கெதிரான இலங்கை ரூபாவின் இற்றைவரையான ஆண்டுக்கான தேய்வு 3.3 சதவீதமாக இருந்தது.

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 50 ஆம் பிரிவின் பிரகாரம் 2025 இன் முதல் ஆறு மாதங்கள் தொடர்பிலான அபிவிருத்திகளை பின்வரும் பிரிவுகள் எடுத்துரைக்கின்றன.

1.2 பணவீக்கம்

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் ஆண்டுக்காண்டு மாற்றத்தினால் அளவிடப்படுகின்றவாறான முதன்மைப் பணவீக்கம் (கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண், 2021=100),2025 சனவரியில் பதிவாகிய -4.0 சதவீதத்திலிருந்து 2025 யூனில் -0.6 சதவீதமாக அதிகரித்தது. 2024 செப்டெம்பரில் எதிர்கணியப் புலத்திற்கு பிரவேசித்ததன் பின்னர் (-0.5 சதவீதம்) பணவீக்கமானது 2025 பெப்ரவரியில் -4.2 சதவீதம் கொண்ட அதன் ஆகக்குறைந்த புள்ளியினை அடைந்தது. பணச்சுருக்கத்திற்கு வழங்கல் பக்க காரணிகள் விசேடமாக, மின்சாரக் கட்டணங்கள், மற்றும் எரிபொருள், திரவப் பெற்றோலிய எதிர்வாயு விலைகளுக்கு பல சுற்று கீழ் நோக்கிய திருத்தங்கள், உள்நாட்டு வழங்கல் பக்க மேம்பாடுகள் மற்றும் உலகளாவிய வழங்கல் சங்கிலியின் மீட்சி என்பன பிரதான காரணமாக அமைந்தன. எனினும் பணச்சுருக்கப்போக்கு பிரதானமாக புள்ளிவிபர தளதாக்கம் காரணமாக 2025 மார்ச் தொடக்கம் தளரத் தொடங்கியது.

அதேவேளை, உணவு, வலு, போக்குவரத்து போன்ற தளம்பல் மிக்க பொருட்களை நீக்குவதன் மூலம் பொருளாதாரத்தின் அடிப்படை போக்குகளைப் பிரதிபலிக்கின்ற (ஆண்டுக்காண்டு) மைய பணவீக்கம் (CCPI 2021=100) 2025 இன் முதலரைப்பகுதி முழுவதும் நேர்க்கணியமாகக் காணப்பட்டது. 2025 இன் சனவரியில் பதிவாகிய 1.2 சதவீதத்திலிருந்து 2025 யூனில் இது 1.5 சதவீதமாக அதிகரித்தது. பணவீக்கமானது கேள்வியினால் இயக்கப்படாதிருந்தது என்பதனை இவ்வொப்பீட்டு ரீதியான உறுதியான மையப்பணவீக்கம் பரிந்துரைக்கின்ற அதேவேளை, மையப்பணவீக்கத்தின் போக்கு வலு விலைகளுக்கான திருத்தங்களின் இரண்டாம் சுற்றுத் தாக்கங்களை எடுத்துக் காட்டுகின்றது.

2024 செப்டெம்பரில் எதிர்க்கணிய புலத்திற்கு (-0.2 சதவீதம்) பிரவேசித்த தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் (தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்,2021=100), ஆண்டுக்காண்டு மாற்றத்தினால அளவிடப்படுகின்றவாறான (ஆண்டுக்காண்டு) முதன்மைப் பணவீக்கம், 2025 சனவரியில் -4.0 சதவீதம் கொண்ட அதன் ஆகக் குறைந்த புள்ளியினைப் பதிவுசெய்தது. இது 2025 மே மாதத்தில் நேர்க்கணிய புலத்திற்கு திரும்பலடைந்து 0.6 வீதத்தினை பதிவுசெய்தது. எனினும், முதன்மைப் பணவீக்கம் 2025 மேயில் மீண்டும் 0.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படையிலமைந்த முதன்மை பணவீக்கத்தின் இத்திரும்பலானது நுகர்வுக்கூடையின் உள்ளமைப்பில் வேறுபாடுகளை எடுத்துக்காட்டுகின்றது. அதாவது, கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் கூடை உணவல்லா பொருட்களின் அதிக பங்கினைக் கொண்டுள்ள அதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் கூடை ஒப்பீட்டளவில் உணவு மீது அதிக நிறைவேற்றலை இடம்பெறச் செய்கின்றது. அதேபோன்று தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (2021=100) மூலம் அளவிடப்படுகின்றவாறான மையப் பணவீக்கம் 2025 சனவரியில் எதிர்க்கணியப்புலத்திற்கு பிரவேசித்து, -0.2 சதவீதத்தினை பதிவுசெய்து, 2025 மேயில் நேர்க்கணியப்புலத்திற்கு திரும்பலடைந்து 0.3 சதவீதத்தினை பதிவுசெய்ததுடன் 2025 மே 0.6 சதவீதத்தில் அதிகரித்தது.

சக்தி மற்றும் போக்குவரத்து விலைகள் உறுதிப்படுத்தப்பட்டு, முன்னெடுக்கப்படுகின்ற நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த நாணயக் கொள்கை நிலை காரணமாக கேள்வி நிலைமைகளில் படிப்படியான மேம்பாட்டுடன் இலங்கை மத்திய வங்கியானது பணவீக்கம் 2025 இன் மூன்றாவது காலாண்டின் நேர்க்கணியமாகத் திரும்பி 5.0 சதவீதம் கொண்ட இலக்கினை படிப்படியாக அண்மிக்குமென எதிர்பார்க்கின்றது.

1.3 பணம் மற்றும் கடன்

இலங்கை மத்திய வங்கி, ஆண்டின் தொடக்கத்தில் 8.00 சதவீதமாகவிருந்த ஓரிரவுக் கொள்கை வீதத்தில் 2025 மேயில் 7.75 சதவீதமாக 25 அடிப்படை புள்ளிகளால் குறைத்து, நாணயக் கொள்கையை மேலும் தளர்த்தியது. அதற்கமைய ±50 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட முன்கூட்டி நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளுடன் கூடிய ஓரிரவுக் கொள்கை வீதத்திற்கு இணைக்கப்பட்டுள்ள துணைநில் வைப்பு வசதி வீதமும்

1 2025 ஓகஸ்ட்டில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மூலம் சுற்றுலாப் பயணி ஒருவரினால் நாளொன்றுக்கான சராசரி செலவின மதிப்பீட்டுக்காக கீழ் நோக்கிய சீராக்கமொன்று மேற்கொள்ளப்பட்டது.

துணைநில் கடன்வழங்கல் வசதிவீதமும் முறையே 7.25 சதவீதத்திற்கும் 8.25 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன. இதன் விளைவாக சராசரி நிறைவேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் மற்றும் சராசரி நிறைவேற்றப்பட்ட புதிய சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி வீதம் மற்றும் ஏனைய முக்கிய சந்தை வைப்பு மற்றும் கடன்வழங்கல் வீதங்கள் (AWPR)போன்ற குறுகிய கால வீதங்கள், கடன்வழங்கல் வீதங்கள் என்பன உள்ளடங்கலாக அநேகமான சந்தை வட்டிவீதங்கள் வீழ்ச்சியடைந்தன.

2025 சனவரி – யூன் காலப்பகுதியில் முதன்மை ஏலங்களின் அனைத்து முதிர்ச்சிகள் முழுவதும் திறைசேரி உண்டியல் விளைவுகள் வீழ்ச்சியடைந்ததுடன் முதல்நிலை மற்றும் இரண்டாந்தர சந்தைகள் இரண்டிலும் நீண்டகால விளைவுகளும் வீழ்ச்சியடைந்தன. கொள்கைவீத மாற்றங்கள் மற்றும் சந்தை அடிப்படையில் அமைந்த வழிமுறைகள் மூலம் முறைமையாக செல்வாக்குச் செலுத்தப்பட்ட நாணய நிலைமைகளுடன் திரவத் தன்மை மீது நேரடித் தாக்கம் எதுவும் கொண்டிராது 2025 இன் முதலரைக் காலப்பகுதியின் நியதி ஒதுக்கு விகிதம் 2.0 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது.

நாணயக் கொள்கை தளர்வடைதல் மற்றும் திரவத்தன்மை நிலைமைகளில் மேம்பாடுகள் என்பனவற்றின் மூலம் விரிந்த பண நிரம்பலானது (M_{2b}) தனியார்துறைக்கான கொடுகடனில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மற்றும் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் விரிவடைதல் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு, 2025 சனவரி இறுதியில் ரூ. 14,439.1 பில்லியனிலிருந்து 2025 யூன் இறுதியில் ரூ. 15,175.8 பில்லியனாக அதிகரித்தது. தனியார் துறைக்கான கொடுகடன் பாய்ச்சல்கள், 2025 சனவரி இறுதியில் ரூ. 8,151.4 பில்லியனிலிருந்து 2025 யூன் இறுதியில் ரூ. 8,856.1 பில்லியனாக அதிகரித்தது. மேம்பட்ட வெளிநாட்டுத்துறை செயலாற்றத்தினைப் பிரதிபலித்து தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2025 சனவரி இறுதியில் ரூ. 747.4 பில்லியனிலிருந்து 2025 யூன் இறுதியில் ரூ. 889.6 பில்லியனாக அதிகரித்தது.

அட்டவணை 1.2 பணம் மற்றும் தனியார்த் துறைக் கடன்

ரூபா.பில்லியன்

விடயம்	2024						2025						2025 ஜூன்/ 2024 ஜூன் வளர்ச்சி (%)
	சனவரி	பெப்ரவரி	மார்ச்	ஏப்பிரல்	மே	யூன்	சனவரி	பெப்ரவரி	மார்ச்	ஏப்பிரல்	மே	யூன்	
ஒதுக்குப் பணம்	1,488.6	1,413.7	1,405.6	1,426.5	1,396.2	1,417.7	1,567.0	1,589.6	1,668.6	1,677.7	1,651.1	1,660.1	17.1
விரிந்த பணம் (M2b)	13,114.9	13,201.1	13,324.6	13,420.0	13,616.4	13,747.9	14,439.1	14,543.8	14,777.7	14,931.9	14,965.5	15,175.8	10.4
தனியார்த் துறைக் கடன்	7,314.2	7,321.5	7,393.4	7,377.2	7,437.9	7,512.4	8,151.4	8,256.9	8,414.6	8,501.6	8,634.6	8,856.1	17.9

மூலம் : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.3 மூலதன சந்தையின் இயக்கங்கள்

குறிகாட்டிகள்	2021	2022	2023	2024	யூன் மாத இறுதி 2024	யூன் மாத இறுதி 2025
அனைத்து பங்கு விலைச் சுட்டெண் (1985=100)	12,226	8,490	10,594	15,945	12,145	18,027
எஸ் அன்ட் பீ.எஸ்.எல். 20 சுட்டெண்	4,233	2,636	3,010	4,862	3,589	5,353
சந்தை மூலதனமாக்கல் (ரூபா. பில்)	5,489	3,847	4,261	5,696	4,760	6,438
வர்த்தகப் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை	296	290	290	284	284	284
நாளாந்த சராசரி புரள்வு (ரூபா. பில்)	4,888	2,972	1,697	2,240	1,777	4,085
வெளிநாட்டு விற்பனை (ரூபா. பில்)	86,689	36,863	37,088	52,441	36,093	37,999
வெளிநாட்டு கொள்முதல் (ரூபா. பில்)	39,410	67,488	41,451	42,524	27,069	26,214
தேறிய கொள்முதல் (ரூபா. பில்)	-47,279	30,625	4,363	-9,918	-9,025	-11,785

மூலம் : கொழும்பு பங்குச் சந்தை

1.4 பங்குச் சந்தை

இலங்கையின் பங்குச்சந்தை 2025 முதலரைப்பகுதி காலத்ததின் போது ஆற்றல் வாய்ந்த வளர்ச்சியினை எடுத்துக்காட்டியது. ஒட்டுமொத்த சந்தைச் செயலாற்றத்தினையும் எடுத்துக்காட்டுகின்ற அனைத்துப் பங்குவிலைச் சுட்டெண் (1985=100) 2024 யூன் இறுதியிலுள்ளவாறான 12,145 புள்ளிகளுடன் ஒப்பிடுகையில் 2025 யூன் இறுதியில் 18,027 புள்ளிகளாக 48.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு

அதிகரித்தது. அனேகமான திரவத்தன்மை பங்குகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஸ்ராண்டட் அன்ட் புவர்ஸ் ஸ்ரீலங்கா 20 (S&P SL 20, 2004=1,000) சுட்டெண் 2024 யூன் இறுதியிலுள்ளவாறான 3,589 புள்ளிகளிலிருந்து 2025 யூன் இறுதியில் 5,353 புள்ளிகளாக 49.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இம்மேல்நோக்கிய போக்கு வலுவான நிறுவனச் செயலாற்றம், சாதகமான பொருளாதார தோற்றப்பாடு மற்றும் தளர்வடைந்த நாணய நிலைமைகள் மூலம் துணையளிக்கப்பட்டு உள்நாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து கிடைத்த அதிகரித்த பங்கேற்பினால் பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் சந்தை மூலதனமாக்கல், 2024 யூன் இறுதியில் பதிவாகிய ரூ. 4,760 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 யூன் இறுதியில் ரூ. 6,438 பில்லியனாக 35.2 சதவீதத்தினால் அதிகரித்தது. சந்தை மூலதனமாக்கலில் இவ்வளர்ச்சி பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் விரிவடைகின்ற பெறுமதியினையும் இலங்கை பங்குச் சந்தை முதலீட்டாளர்களை கவருவதில் அதிகரிப்பினையும் பிரதிபலிக்கின்றது. மேலும், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை 2024 யூன் இறுதியில் பதிவாகிய ரூ. 1,777 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 யூன் இறுதியில் உள்ளவாறு ரூ. 4,085 மில்லியனாக 129.8 சதவீதம் கொண்ட நாளாந்தப் புரள்வின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. பரிவர்த்தனையில் வர்த்தகச் செயற்பாடுகளில் விதிவிலக்கான அதிகரிப்பையும், சந்தைத் திரவத் தன்மையில் கணிசமாக விரிவடைதலினையும் முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் பங்கேற்றலின் மேம்படுதலினையும் இது எடுத்துக்காட்டுகின்றது.

1.5 வெளிநாட்டுத்துறையின் அபிவிருத்திகள்

இலங்கையின் வெளிநாட்டுத்துறையானது 2025 இன் முதலரைப் பகுதியின் சாதகமான உட்வேகத்தை எடுத்துக்காட்டியது. விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறைக்கு மத்தியில், தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் சுற்றுலாத்துறை என்பவற்றில் இருந்தான வருவாய்கள் மூலம் கிடைத்த அதிகரித்த உட்பாய்ச்சல்களினால் இது தூண்டப்பட்டிருந்தது. 2025 இன் முதலரைப்பகுதியில் தொழிலாளர்கள் பணவனுப்பல்களில் இருந்து கிடைத்த உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 3,738.0 மில்லியனாக 18.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்த அதேவேளை, சுற்றுலாத்துறையிலிருந்து கிடைத்த வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,712.6 மில்லியனாக 10.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. ஏற்றுமதிகளில் இருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 6,492.1 மில்லியனாக 5.7 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 9,762.2 மில்லியனாக 12.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன் பயனாக வர்த்தகப் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 3,270.1 மில்லியனாக விரிவடைந்தது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், 2024 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 5.7 பில்லியனிலிருந்து 2025 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 6.1 பில்லியனாக அதிகரித்தன.

அரசாங்க பிணையங்கள் சந்தைக்கான தேறிய உட்பாய்ச்சல்கள் 2024 அதேகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 198.1 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 90.1 மில்லியனாகவிருந்தது. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை 2024 இன் அதேகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 19.1 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 39.2 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலை பதிவுசெய்தது. ஒட்டுமொத்த சென்மதி நிலுவை, 2024 இன் அதேகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,761.1 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 522.5 மில்லியன் கொண்ட மிகையினைப் பதிவுசெய்தது. இலங்கை ரூபா, 2025 யூன் இறுதியளவில் ஐ.அ.டொலருக்கெதிராக 2.5 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

ஏற்றுமதிகள்

ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், பொருளாதார மீட்சி அத்துடன் கைத்தொழில் மற்றும் விவசாய ஏற்றுமதிகளிலிருந்தான வருவாயின் அதிகரிப்பு மற்றும் உலகளாவிய நிச்சயமற்ற தளம்பல்களுக்கு தாக்குப்பிடிக்கும் தன்மை என்பன காரணமாக 2024 இன் அதேகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 6,144.4 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 6,492.1 மில்லியனாக 5.7 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்த ஏற்றுமதி வருவாய்களுக்கு கைத்தொழில்சார் ஏற்றுமதி வருவாய்கள் 77.7 சதவீதம் பங்களித்த அதேவேளை, விவசாய மற்றும் கணிய ஏற்றுமதி வருவாய்கள் மொத்த ஏற்றுமதி வருவாய்களின் முறையே 22.0 சதவீதத்திற்கும் 0.2 சதவீதத்திற்கும் வகைகூறின.

கைத்தொழில்சார் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், புடவைகள் மற்றும் ஆடைகள் அத்துடன் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள் என்பவற்றிலிருந்து கிடைத்த அதிகரித்த ஏற்றுமதி வருவாய்கள் காரணமாக 2024 இன் அதேகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 4,837.2 மில்லியனிலிருந்து 2025 இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 5,044.5 மில்லியனாக 4.3 சதவீதத்தினால் அதிகரித்தன. விவசாய ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், தேயிலை, தெங்கு, இறப்பர் என்பவற்றிலிருந்து கிடைத்த அதிகரித்த வருவாய்களுடன் 2024 இன் அதேகாலப்பகுதியின் ஐ.அ.டொலர் 1,281.0 மில்லியனிலிருந்து 2025 இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,427.5 மில்லியனாக 11.4 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளை, கனிய ஏற்றுமதி வருவாய்கள் 2024 இன் அதேகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 12.4 மில்லியனிலிருந்து 2025 இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 10.1 மில்லியனாக 18.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

இறக்குமதிகள்

இறக்குமதிகள் மீதான செலவினம் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சியின் தாக்கம் மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் குறிப்பாக, மோட்டார் வாகனங்கள் மீதான கட்டுப்பாடுகளை அகற்றுதல் என்பவற்றைப் பிரதிபலித்து, நுகர்வோர் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினத்தின் அதிகரிப்பு காரணமாக 2024 இன் அதேகாலப்பகுதியின் ஐ.அ.டொலர் 8.684.4 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 9,762.2 மில்லியனாக 12.4 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்த இறக்குமதி செலவினத்தின் நுகர்வோர், இடைநிலை, முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் முறையே 23.7 சதவீதம், 57.1 சதவீதம், 19.1 சதவீதமாகவிருந்தன.

நுகர்வோர் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினமானது உணவு மற்றும் குடிபானங்கள் அத்துடன் உணவல்லா நுகர்வோர் பொருட்கள் மீதான அதிகரித்த இறக்குமதிச் செலவினம் காரணமாக 2024 இன் அதேகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,534.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 2,315.5 மில்லியனாக 50.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. அதேவேளை, இடைநிலைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2024 இன் அதேகாலப்பகுதியின் ஐ.அ.டொலர் 5,634.2 மில்லியனிலிருந்து 2025 இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 5,575.6 மில்லியனாக 1.0 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் மீதான செலவினம் 0.7 சதவீதத்தினாலும் விவசாய உற்பத்திகள் 5.2 சதவீதத்தினாலும் பிளாஸ்ரிக் மற்றும் அதன் பொருட்கள் 11.2 சதவீதத்தினாலும் அதிகரித்தமைக்கு மத்தியில் எரிபொருள் மீதான இறக்குமதிச் செலவினம் 9.7 சதவீத்தினால் வீழ்ச்சியடைந்தமை இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. எரிபொருள் மீதான இறக்குமதிச் செலவினம் 2025 முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,995.7 மில்லியனாக 9.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மீதான இறக்குமதிச் செலவினம் 7.3 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 1,420.3 மில்லியனாகவும் மசகு எண்ணெய் 11.9 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 445.9 மில்லியனாகவும் நிலக்கரி 24.0 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 129.5 மில்லியனாகவும் குறைவடைந்தமை முக்கிய காரணமாக அமைந்தது.

அட்டவணை 1.4 வெளிநாட்டு வர்த்தகம் (2025 சனவரி - யூன்)

ஐ.அ.டொ. மில்லியன்

வகை	2024	2025	% மாற்றம்
ஏற்றுமதிகள்	**6,144.4**	**6,492.1**	**5.7**
விவசாய உற்பத்திகள்	1,281.0	1,427.5	11.4
தேயிலை	687.0	743.1	8.2
இறப்பர்	11.8	14.7	24.6
தென்னை	191.2	248.7	30.1
ஏனைய விவசாய உற்பத்திகள்	391.0	421.0	7.7
கைத்தொழில் ஏற்றுமதிகள்	4,837.2	5,044.5	4.3
உணவு, பானங்கள் மற்றும் புகையிலை	312.6	407.6	30.4
புடவை மற்றும் தைக்கப்பட்ட ஆடைகள்	2,408.1	2,605.8	8.2
பெற்றோலிய உற்பத்திகள்	533.1	465.3	-12.7
இறப்பர் உற்பத்திகள்	487.1	453.1	-7.0
இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்	247.1	225.4	-8.8
ஏனைய கைத்தொழில் உற்பத்திகள்	849.2	887.3	4.5
கனிப் பொருட்கள்	12.4	10.1	-18.2
ஏனையவை	13.8	9.9	-28.3
இறக்குமதிகள்	**8,684.4**	**9,762.2**	**12.4**
நுகர்வுப் பொருட்கள்	1,534.2	2,315.5	50.9
உணவு மற்றும் குடிபானங்கள்	843.6	1,094.5	29.7
ஏனைய நுகர்வுப் பொருட்கள்	690.6	1,221.0	76.8
இடைநிலைப் பொருட்கள்	5,634.2	5,575.6	-1.0
பெற்றோலியம்	2,209.2	1,995.7	-9.7
உரம்	47.4	94.1	98.5
புடவைகள் மற்றும் தைக்கப்பட்ட ஆடைகள்	1,327.5	1,334.4	0.5
இரசாயன உற்பத்திகள்	464.3	488.6	5.2
பிளாஸ்ரிக் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த	268.2	298.3	11.2
ஏனைய இடைநிலைப் பொருட்கள்	1,317.6	1,364.5	3.6
முதலீட்டுப் பொருட்கள்	1,510.9	1,862.6	23.3
இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்	1,020.2	1,208.0	18.4
போக்குவரத்து உபகரணங்கள்	61.3	173.7	183.3
கட்டிட மூலப்பொருட்கள்	428.3	479.1	11.9
ஏனைய முதலீட்டுப் பொருட்கள்	1.1	1.8	63.6
வகைப்படுத்தப்படாத இறக்குமதி	5.0	8.5	70.0
வர்த்தக மீதி	**-2,540.0**	**-3,270.1**	**28.7**

மூலம் : இலங்கை மத்திய வங்கி

முதலீட்டு பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2024 இன் அதேகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,510.9 மில்லியனிலிருந்து 2025 இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,862.6 மில்லியனாக 23.3 சதவீதத்தினால் அதிகரித்தது. பொருளாதார மீட்சியுடன் முதலீட்டு நடவடிக்கைகளில் மேம்படுதல் காரணமாக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் 18.4 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 1,208.0 மில்லியனாகவும் கட்டிடப் பொருட்கள் 11.9 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 479.1 மில்லியனாகவும் போக்குவரத்துச் சாதனங்கள் 183.3 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 173.7 மில்லியனாகவும் செலவினத்தில் அதிகரிப்பு பிரதான காரணமாக அமைந்தது.

தொழிலாளர் பணவனுப்பல்களும் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்களும்

தொழிலாளர் பணவனுப்பல்கள், முறையான வழிகள் ஊடாக பணவனுப்பல்களின் கிடைப்பனவு காரணமாக 2024 இன் அதேகாலப்பகுதியின் ஐ.அ.டொலர் 3,144.0 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 3,738.0 மில்லியனாக 18.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. அதேவேளை, சுற்றுலாத்துறையில் வலுவான மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட மீட்சி காரணமான சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் காரணமாக 2024 இன் அதேகாலப்பகுதியின் ஐ.அ.டொலர் 1,556.6 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 1,712.6 மில்லியனாக 10.0 சதவீதத்தினால் அதிகரித்தன. அதற்கமைய சுற்றுலா பயணி வருகைகள் 2024 இன் அதேகாலப்பகுதியின் 1,010,249 ஆட்களுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியின் 1,168,044 நாட்களாக 15.6 சதவீதத்தனால் வளர்ச்சியடைந்தன. அதிகூடிய சுற்றுலாப்பயணி வருகைகள் 2025 இன் முதலரைப்பகுதியில் இந்தியா, ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி. பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து பதிவாகியதுடன் தென் ஆசியா, ஐரோப்பா மற்றும் ஆசிய பசுபிக் பிராந்தியங்களிலிருந்து நம்பிக்கையளிக்கும் வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

அட்டவணை 1.5 உலகம் பற்றிய ஓர் பார்வை – 2024

நாடு	2024 உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (வருடாந்த சதவீத மாற்றம்)	பணவீக்கம் (சதவீதம்)	வேலையின்மை (சதவீதம்)	அரசிறை மீதி (உள்நாட்டு உற்பத்தி சதவீதம்)	மொத்த கடன்(உள்நாட்டு உற்பத்தி சதவீதம்)
ஆஜன்டீனா	-1.7	219.9	7.2	0.9	85.3
அவுஸ்ரேலியா	1.0	3.2	4	-2.2	49.8
பிரேசில்	3.4	4.4	6.9	-6.6	87.3
கனடா	1.5	2.4	6.4	-2.1	110.8
சிலி	2.6	3.9	8.5	-2.7	42.0
சீனா	5.0	0.2	5.1	-7.3	88.3
பிரான்ஸ்	1.1	2.3	7.4	-5.8	113.1
ஜேர்மனி	-0.2	2.5	3.4	-2.8	63.9
கிரீஸ்	2.3	3.0	10.1	-0.3	150.9
இந்தியா	6.5	4.7	4.9	-7.4	81.3
இந்தோனேசியா	5.0	2.3	4.9	-2.3	40.2
இத்தாலி	0.7	1.1	6.6	-3.4	135.3
யப்பான்	0.1	2.7	2.6	-2.5	236.7
கொரியா	2.0	2.3	2.8	-0.6	52.5
மலேசியா	5.1	1.8	3.2	-4.0	70.4
மெக்சிகோ	1.5	4.7	2.7	-5.7	58.4
ரஷ்யா	4.1	8.4	2.5	-2.2	20.3
சிங்கப்பூர்	4.4	2.4	2.0	4.4	174.3
தென் ஆகிரிக்கா	0.6	4.4	32.8	-6.1	76.4
ஸ்பெயின்	3.2	2.9	11.3	-3.2	101.8
இலங்கை	5.0	1.2	4.4	-6.8	96.1
தாய்லாந்து	2.5	0.4	1.0	-1.3	63.2
ஐக்கிய இராச்சியம்	1.1	2.5	4.3	-5.7	101.2
ஐக்கிய அமெரிக்கா	2.8	3.0	4.0	-7.3	120.8
வியட்நாம்	7.1	3.6	2.2	-1.6	32.9
வெனிசுலா	5.3	49.0	...	-3.6	164.3

மூலம் : "உலக பொருளாதாரக் கண்ணோட்டம்", சர்வதேச நாணய நிதியம் 2025 ஏப்ரல்
... தகவல் இல்லை

1.6 உலகளாவிய பொருளாதார முன்நோக்குகள்[2]

2025 இன் முதலரைப்பகுதியின் உலகளாவிய பொருளாதார நிலமைகள் முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட சவால்களின் மிதமான தளர்வடைவதை பிரதிபலித்தன. இறுக்கமான நிதி நிலைமைகள் மூலம் நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டிருந்த அதேவேளை, முன்னைய வழங்கல் அதிர்வுகளின் தாக்கங்கள் மற்றும் பல்வேறு பொருளாதாரங்களிலும் இன்னும் உயர்வடைந்து காணப்படுகின்ற படுகடன் மட்டங்கள் படிப்படியாகக் குறைவடைதல், நுகர்வு மற்றும் சேவைகளின் முக்கிய துறைகளின் தாக்குப்பிடிக்கும் தன்மை என்பன வளர்ச்சிக்கு ஆதரவளித்தது. முன்னைய நாணயக் கொள்கை இறுக்கமாக்கலின் தாக்கம் மிகவும் புலப்படக்கூடியதாக தோற்றம் பெற்றதனால் உலகளாவிய பணவீக்கம் பிராந்தியங்களுக்கிடையில் ஒழுங்கற்றதாக இருக்கின்ற போதிலும் தொடர்ந்தும் அதன் கீழ்நோக்கிய பாதையில் சென்றது. வலு மற்றும் உணவுச் சந்தைகளில் காணப்பட்ட சில வழங்கல் இடையூறுகள், விலைத் தளம்பல்களைக் கொண்டிருந்த போதிலும், அண்மைய ஆண்டுகளில் உச்சத்தை எட்டியதிலிருந்து பண்டச் சந்தைகள் மிதமடைந்தன. அதேவேளை, உலகளாவிய வர்த்தகமானது மீட்சிச் சமிக்ஞையினைக் காண்பித்து, வழங்கல் சங்கலிகளில் மேம்படுதல் மற்றும் முன்னேறிய அத்துடன் சில வளர்ச்சியடைந்து வருகின்ற சந்தைகளில் கேள்வி மீண்டெழுதல் என்பவற்றிலிருந்து பெருமளவில் நன்மையடைந்து 2023-2024 இல் பதிவாகிய மெதுவடையும் பாகத்திலிருந்து திரும்பலடைந்தது. நிதியியல் நிலைமைகள் இறுக்கமாகக் காணப்பட்டன. இருந்தபோதிலும் பணச்சுருக்கச் சமிக்ஞைகள் இறுதியாக முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் நாணயத் தளர்வு பற்றிய எதிர்பார்க்கைகளை மீள வலுப்படுத்தியமையால் பல பொருளாதாரங்களிலும் சந்தை எண்ணப்பாங்குகள் மேம்பட்டன.

உலகளாவிய வளர்ச்சி

உலகளாவிய வெளியீடு 2024 இல் ஏறத்தாள 3.2 சதவீதத்தினால் விரிவடைந்துள்ளது என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் 2025 இல் பரந்தளவில் மாற்றமின்றிக் காணப்படுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. உள்நாட்டுக் கேள்வி மற்றும் முதலீடு மீதான உயர்வான கொள்கை வட்டிவீதங்களின் காலம்கடந்த தாக்கத்தினைப் பிரதிபலித்து, முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களின் வளர்ச்சி மெதுவடைந்தது. தாக்குப் பிடிக்கும் நுகர்வு மற்றும் முதலீடு மூலம் துணையளிக்கப்பட்ட ஒப்பீட்டளவில் வலுவான செயலாற்றத்தினை. ஐக்கிய அமெரிக்கா பேணிய அதேவேளை, நலிவான வெளியீடு மற்றும் குறைவான வெளிநாட்டுக் கேள்வி என்பவற்றுக்கு மத்தியில் ஐரோப்பிய பிராந்தியத்தில் வளர்ச்சி குறைவடைந்து காணப்பட்டது. தொற்றுநோய்க்கு பிந்திய மீட்சி விளைவுகள் குறைவடைந்தமையினால் யப்பானின் வளர்ச்சி தொற்றுநோய்க்குப் பிந்திய மீட்சித் தாக்கங்கள் படிப்படியாக மறைந்தமையினால் மிதமடைந்தது.

வளர்ந்துவரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரம் மத்தியில் வளர்ச்சி இயக்கவாற்றல்கள் கலந்தவையாக இருந்தன. பல பாரிய ஆசிய பொருளாதாரங்களில் ஆற்றல்வாய்ந்த விரிவடைதலானது வர்த்தக நிதி அனர்த்தங்களை எதிர்கொண்ட சில பண்ட ஏற்றுமதி நாடுகளின் மெதுவான செயற்பாட்டினை எதிரீடுசெய்தன. சீனாவின் பொருளாதாரமானது உண்மைச் சொத்துகளில் கட்டமைப்புசார்ந்த சவால்கள் மற்றும் எதிர்பார்க்கைகள் மீது சனத்தொகை தொடர்ந்தும் அழுத்தம் ஏற்படுத்திய போதிலும் ஆதனச் சந்தைகளை உறுதிப்படுத்துவதற்கும் உள்நாட்டு நுகர்வினை உந்துவதற்குமான கொள்கை வழிமுறைகளால் துணையளிக்கப்பட்டு மிதமாக வளர்ச்சியடைந்தது. நடுத்தரகால எதிர்வுகூறல்கள் வரலாற்று ரீதியான சராசரிக்கு கீழ் காணப்பட்ட போதிலும் பணச்சுருக்கம் மிகவும் தளர்வான நாணய நிலைமைகளை இயலச்செய்து, முதலீட்டு நடவடிக்கை மேம்பட்டமையினால் உலகளாவிய வளர்ச்சி 2026 இல் படிப்படியாக வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பணவீக்கம்

பணவீக்க அழுத்தங்கள் 2025 இன் முதலரைப்பகுதியில் மேலும் பின்வாங்கிச் சென்றது. உணவு மற்றும் வலு விலைகளில் தளர்வு மற்றும் முன்னைய வழங்கல் இடையூறுகள் தளர்ந்து செல்லுதல் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு, உலகளாவிய முதன்மைப் பணவீக்கம் மிகவும் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. மையப் பணவீக்கமும் மிதமான வேகமாயினும் கீழ் நோக்கிய போக்கில் சென்று முன்னேற்றமடைந்த சில பொருளாதாரங்களில் இன்னும் உறுதியான சேவை விலைகள் மற்றும் சம்பள ஈடுகொடுக்கும் நிலை என்பவற்றைப் பிரதிபலித்தது. முன்னேற்றகரமான பொருளாதார பணவீக்கம் மத்திய வங்கி இலக்குகளை நெருங்கிய அதேவேளை, பல வளர்ந்துவரும் சந்தைப் பொருளாதாரங்கள் விரும்பப்பட்ட வீச்சுகளுக்கு மேல் தொடர்ந்தும் பணவீக்க வீதங்களை எதிர்கொண்டன. இதற்கு நாணயத் தேய்வு மற்றும் உள்நாட்டு வழங்கல் தடைகள் என்பன பெருமளவு காரணமாக அமைந்தன.

முன்நோக்கி நோக்குகையில் அநேகமான பொருளாதாரங்களில் முதன்மைப் பணவீக்கமானது புதுப்பிக்கப்பட்ட பண்ட சந்தை அதிர்வுகள் இல்லாதவிடத்து, 2026 இல் இலக்கு வீச்சுகளை நோக்கி வீழ்ச்சியடையுமென எதிர்வுகூறப்படுகின்றன. பணச்சுருக்க செயன்முறைக்கான இடர்களானது தீவிரமடைந்த புவிசார் அரசியல் மற்றும் வர்த்தகப் பதற்றங்கள், சாத்தியமான எரிபொருள் வழங்கல் இடையூறுகள் மற்றும் உற்பத்தித்திறனை விஞ்சிச் செல்கின்ற விடாப்பிடியான சம்பள வளர்ச்சி என்பவற்றை உள்ளடக்குகின்றன.

பண்டச் சந்தைகள்

பண்ட விலை அபிவிருத்திகள், 2022, 2023 ஆம் ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட தலம்பலுடன் ஒப்பிடுகையில் தளர்வடைந்தன. சர்வதேச எரிபொருள் விலைகள் 2025 இன் முதலரைப்பகுதியில் மிதமடைந்து போதிய வழங்கல் நிலைமைகளையும் குறைவடைந்த உலகளாவிய கேள்வி வளர்ச்சியையும் பிரதிபலித்தன எனினும், முக்கிய உற்பத்திப் பிராந்தியங்களில் காணப்பட்ட பதற்றங்கள் வழங்கல் வழிகள் மீது நிச்சயமின்மையை தோற்றுவித்ததனால் காலமுறையான தளம்பல் விடாப்பிடியாகவிருந்தன. உயர்வான

2. உலகப் பொருளாதார தோற்றப்பாடு இற்றைப்படுத்தல் (2025 யூலை, சர்வதேச நாணய நிதியம் மற்றும் வெளிநாட்டுத் துறை அறிக்கை (2025 யூலை சர்வதேச நாணய நிதியம்) என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது.

கையிருப்புகள் மற்றும் வழங்கல் மூலங்களைப் பண்முகப்படுத்தல் என்பன காரணமாக ஐரோப்பாவில் இயற்கை வாயு விலைகள் வீழ்ச்சியடைந்தன.

உணவுப் பண்ட விலைகள், பல முக்கிய உற்பத்தி நாடுகளில் மேம்பட்ட அறுவடை நிலைமைகளினால் துணையளிக்கப்பட்டு குறைவை நோக்கி நகர்ந்தன. தானிய வழங்கல் அதிகரித்து காலநிலை மாறுபாட்டுடன் தொடர்புடைய உள்நாட்டுமயப்படுத்தப்பட்ட வானிலை அதிர்வுகள் குறுகிய கால தலம்பல்களை தோற்றுவித்த போதிலும் உலகளாவிய உணவுச் சந்தைகளில் அழுத்தங்கள் இல்லாதொழித்தன. மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் மின்சார வாகனங்கள் என்பவற்றில் முதலீடு மூலம் இன்றியமையாத கணிமங்கள் துணையளிக்கப்பட்டு வருவதற்கான கேள்வியுடன் உருக்கு விலைகள் மிகவும் உறுதியினை காண்பித்த அதேவேளை, நிர்மாணத்துறையின் நலிவு சில பிராந்தியங்களில் கேள்வியினை குறையச் செய்தன.

1.7 உலக வர்த்தகம்

2023 காலப்பகுதியில் உலகளாவிய வர்த்தக அளவுகளில் சடுதியான மிதமடைதலின் பின்னர் வர்த்தக குறிகாட்டிகள் 2024 இன் பிந்திய பகுதிகளில் மீளெழுச்சியொன்றினை காண்பித்தன. இது 2025 இன் முதலரைப்பகுதியிலும் நீடித்தது. குறைவடைந்த கப்பற் செலவுகள் மற்றும் மேம்பட்ட வழங்கல் சங்கிலி வினைத்திறன் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு தயாரிப்பு வர்த்தகப் பாய்ச்சல்கள் விரிவடைந்தன. முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களின் கேள்வி மீட்சியானது ஆசியாவுக்கான தாக்குப்பிடிக்கத்தக்க நுகர்வோர் இலத்திரனியல் மற்றும் கைத்தொழில்சார் உள்ளீடுகளுக்கான கேள்வி என்பவற்றுடன் இணைந்து சாதகமாக பங்களித்தன. எவ்வாறீருப்பினும், ஐக்கிய அமெரிக்க வரிகள், புவிசார் அரசியல் பிரிவினைகள் மற்றும் ஐரோப்பா அத்துடன் இலத்தீன் அமெரிக்கா என்பவற்றின் பாகங்களில் எதிர்பார்த்ததைவிட மெதுவான பொருளாதார வளர்ச்சி போன்ற நீடித்திருக்கின்ற தற்காப்பு வழிமுறைகளிலிருந்து வந்த சவால்களை எல்லை தாண்டிய வர்த்தகம் தொடர்ந்தும் எதிர்கொண்டது.

சேவைகள் வர்த்தகம், குறிப்பாக சுற்றுலா மற்றும் டிஜிட்டல் சேவைகள் தளம்பல் மிக்கதாகக் காணப்பட்டு, வளர்ந்துவரும் சந்தைப் பொருளாதாரங்களில் வெளிநாட்டுத்துறை நடவடிக்கையை உறுதிப்படுத்துவதில் முக்கிய பங்காற்றியது. முன்னோக்கி நோக்குகையில் குறைவடைந்த உலகளாவிய முதலீடு மற்றும் கொள்கை நிச்சயமின்மை என்பன உத்வேகத்தை தடைப்படுத்தக் கூடியமையினால் உலக வர்த்தக மீட்சி மிதமானதாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அட்டவணை 1.6 சர்வதேச பொருட்களின் விலைகள்

விடயம்	அலகு	உண்மையான		மதிப்பிடப்பட்ட	
		2023	2024	2025	2026
சக்தி					
நிலக்கரி, அவுஸ்ரேலியா	$/மெ.தொ	172.8	136.1	100.0	95.0
கச்சா எண்ணெய், சராசரி	$/பெரல்	82.6	80.7	64.0	60.0
இயற்கை எரிவாயு, ஐ.அ.	$/மி.பி.வெஅ	2.5	2.2	3.3	3.4
சக்தியற்ற					
விவசாயம்					
குடிபானங்கள்					
கோலா	$/கிகி	3.28	7.33	8.00	7.00
கோப்பி, ரொபஸ்டா	$/கிகி	2.63	4.41	5.50	5.00
தேயிலை	$/கிகி	2.74	3.04	2.50	2.80
உணவு					
கொழுப்புகள் மற்றும் எண்ணெய்கள்					
பாம் எண்ணெய்	$/மெ.தொ	886	963	1,020	1,040
சோயாபீன் உணவு	$/மெ.தொ	541	442	370	369
சோயாபீன்கள்	$/மெ.தொ	598	462	382	386
தானியங்கள்					
சோளம்	$/மெ.தொ	253	191	187	183
நெல்	$/மெ.தொ	554	588	421	422
கோதுமை	$/மெ.தொ	340	269	263	260
ஏனைய உணவுகள்					
சீனி	$/கிகி	0.52	0.45	0.44	0.43
மூலப் பொருட்கள்					
பருத்தி	$/கிகி	2.09	1.91	1.65	1.70
இறப்பர்	$/கிகி	1.38	1.75	2.00	1.90
அறுக்கப்பட்ட மரம்	$/cum	678	697	690	700
உலோகங்கள் மற்றும் கனிமங்கள்					
அலுமினியம்	$/மெ.தொ	2,256	2,419	2,175	2,100
செம்பு	$/மெ.தொ	8,490	9,142	8,200	8,000
நிக்கல்	$/மெ.தொ	21,521	16,814	15,800	16,000

மூலம் : பொருட் சந்தை கண்ணோட்டம் - 2025 ஏப்ரல்

1.8 நாணயம் மற்றும் நிதியியல் துறை

பணவீக்கம் இலக்குகளை நோக்கி நிலைபெறத் தக்கவிதத்தில் செல்வதை உறுதிசெய்வதற்கு அநேகமான முன்னேற்றகரமான பொருளாதாரங்களில் மத்திய வங்கிகள் பணவீக்க வீதங்களை உயர்வடைந்த மட்டங்களில் பேணியமையினால் நாணயம் மற்றும் நிதியியல் நிலைமைகள் 2025 இன் முந்திய காலப்பகுதியில் பொதுவாக இறுக்கமாகக் காணப்பட்டன. பணச்சுருக்கம் மீது தெளிவான முன்னேற்றம் அவதானிக்கப்பட்ட அதேவேளை, நாணய அதிகாரசபைகள் கொள்கை வீதங்களில் குறைப்புகளை சமிக்ஞைப்படுத்துவதில் எச்சரிக்கையாகவிருந்து, வழங்கல் அதிர்வுகள் மற்றும் சம்பள இயக்கவாற்றல்கள் என்பவற்றிலிருந்துவருகின்ற பணவீக்கத்திற்கான மேல்நோக்கிய இடர்கள் பற்றி அவதானமாகவிருந்தன.

பங்குரிமை மூலதனச் சந்தை வருவாய்களைப் பதிவுசெய்து, கொடுகடன் விரிவடைதல்கள் குறுக்கமடைதல் என்பன மூலம் நிதியியல் சந்தைகள் மேம்பட்ட எண்ணப்பாங்கினைக் காண்பித்து, 2025 இன் பிந்திய பகுதியில் நாணயத் தளர்வு தொடங்கக்கூடும் என்ற மிகுந்த முதலீட்டாளர் நம்பிக்கையினை பிரதிபலித்தன. முக்கிய பொருளாதாரங்களில் முறி விளைவுகள் உயர்வடைந்து காணப்பட்ட போதிலும் வீழ்ச்சியடைகின்ற பணவீக்க எதிர்பார்க்கைகளுக்கு பதிலிறுத்தி, நிலைபெறுவதற்கு தொடங்கின. வளர்ந்துவரும் சந்தைகள், மேம்பட்ட முதலீட்டாளர் விருப்பிலிருந்து நன்மைபெற்று அதிக வெளிநாட்டு மீள்நிதியிடல் தேவைகளுடன் கூடிய நாடுகளில் பாதிக்கப்படும் தன்மைகள் விடாப்பிடியாக இருந்தபோதிலும் குறைவடைந்த நாட்டுக்கான விரிவடைதல்கள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட நிதிச் சொத்துப்பட்டியல் உட்பாய்ச்சல்கள் என்பவற்றில் தாக்கம் ஏற்படுத்தின.

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் உலகளாவிய நிதியியல் உறுதிப்பாட்டு இடர்கள் மிதமடைந்த போதிலும் சில பாரிய பொருளாதாரங்களில் உயர்வடைந்த நிறுவன முடுக்கு, ஆதனச் சந்தை சீராக்கங்கள் என்பவற்றுடனும் சில வளர்ந்துவருகின்ற மற்றும் குறைந்த வருமானம் மிக்க நாடுகளில் நாட்டுக்கான படுகடன் அழுத்தங்களுடனும் கரிசனைகள் விடாப்பிடியாகக் காணப்பட்டன. சீரான உலகளாவிய நிதியியல் நிலைமைகளை உறுதிசெய்தலானது நாணயக் கொள்கை இயல்பாக்கம் பற்றிய கவனமான அளவமைத்தல் மற்றும் படுகடன்பாதிக்கப்படும் தன்மையினை தணிப்பதற்கான ஒருங்கிணைப்பதற்கான முயற்சி என்பவற்றிலேயே தொடர்ந்தும் தங்கியிருக்கின்றது.

அத்தியாயம் 2

அரசிறை அபிவிருத்திகள்

2.1 மேன்நோக்கு

2025 இன் முதலரைப்பகுதியின் அரசிறைத் துறையானது வருவாய் அடிப்படையிலமைந்த அரசிறைத் திரட்டலூடாக வலுவான அரசிறை சேகரிப்பு, ஊழலுக்கெதிரான முயற்சிகள் மற்றும் மீளமைக்கப்பட்ட பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு என்பன மூலம் துணையளிக்கப்பட்டு அதன் உத்வேகத்தைப் பெற்றுக்கொண்டது. 2022 – 2024 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வருவாய் அடிப்படையிலமைந்த அரசிறைச் சீராக்கங்கள் தற்போது பயன்தரத் தொடங்கி, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 5.1 சதவீதம் கொண்ட தொகையை எட்டின. மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் வரி வருமானமானது 2022 ஆம் ஆண்டில் 7.3 சதவீதத்தில் இருந்து 2024 ஆண்டில் 12.4 சதவீதமாக உயர்ந்தது. சமத்துவமான மற்றும் வளர்ச்சிச் சிநேகமிக்க அரசிறை சீராக்கங்களுக்காக நிலையான வருவாய் வழியை அடைவதை நோக்கி அரசாங்கம் இயங்குகின்றது. இது ஏனையவற்றுக்கு மத்தியில் செலவினத்தில் வினைத்திறனை மேம்படுத்துதல், முன்னுரிமை கருத்திட்டங்கள் மீது மூலதன ஒதுக்கீட்டை அதிகரித்தல், நேரடி வரிகளின் பங்களிப்பை அதிகரித்தல், வரி நிர்வாகத்தை டிஜிட்டல் மயப்படுத்துகின்ற அதேவேளை, சமூகப் பாதுகாப்பு வலை நிகழ்ச்சித்திட்டங்களை இலக்கிடல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

தொடர்ச்சியான அரசிறைத் திரட்டல் முயற்சிகளை பிரதிபலித்து, வருவாயில் அதிகரிப்பு அத்துடன் மூலதனச் செலவினத்தில் குறைவான ஒதுக்கீடு என்பவற்றின் பிரதான காரணமாக 2024 இன் முதலரைப்பகுதியின் ரூ.543.4 பில்லியன் கொண்ட முதலாந்தர மிகையுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதல் அரைப்பகுதியில் ரூ.859.0 பில்லியன் கொண்ட முதலாந்தர மிகை பதிவாகியது. சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2025 இன் முதலரைப்பகுதிக்கான முதலாந்தர மிகை இலக்காக நிர்ணயிக்கப்பட்ட ரூ.130 பில்லியன் கொண்ட அளவுசார் செயலாற்றப் பிரமாணத்தை இது விஞ்சியுள்ளது. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது 2024 இன் முதலரைப்பகுதியின் ரூ.598.7 பில்லியனிலிருந்து 2025 இன் அதைகாலப்பகுதியில் ரூ.405.6 பில்லியனாக ரூ.193.1 பில்லியனால் குறுக்கமடைந்தது.

வரி, வரியல்லா வருவாய், கொடைகள் உள்ளடங்கலாக மொத்த அரசாங்க வருவாய் 2024 இன் முதலரைப்பகுதியின் ரூ.1,864.6 பில்லியனிலிருந்து 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.2,325.1 பில்லியனாக 24.7 சதவீதத்தினால் அல்லது ரூ.460.5 பில்லியனால் அதிகரித்து ரூ.4,990.0 பில்லியன் கொண்ட வருடாந்த மதிப்பீட்டின் 46.6 சதவீத்தினை அடைந்தது. வரி வருவாய் 2024 இன் முதலரைப்பகுதியின் ரூ.1,709.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.2,152.1 பில்லியனாக 25.9 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.4,590.0 பில்லியன் கொண்ட வருடாந்த மதிப்பீட்டின் 46.9 சதவீத்தினை அடைந்தது. இம்மேம்பாடு கொள்கைத் தூண்டலின் தொடர்ச்சியான நடைமுறைப்படுத்தலின் முழுமையான தாக்கம், வருவாய் அடிப்படையிலமைந்த அரசிறைத் திரட்டல் வழிமுறைகள், மேம்பட்ட வரி நிர்வாகம், பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சி மற்றும் வாகன இறக்குமதி மீதான தடையை அகற்றுதல் உள்ளடங்கலாக இறக்குமதித் தடைகளை நீக்குதல் என்பன மூலம் முதன்மையாகத் தூண்டப்பட்டது.

வருமான வரிகளில் இருந்தான வருவாய் 2025 இன் முதலரைப்பகுதியின் ரூ.488.5 பில்லியனாக 9.2 சதவீதத்தினால் அதிகரித்து ரூ.1,167.0 பில்லியன் கொண்ட வருடாந்த மதிப்பீட்டின் 41.9 சதவீதத்தினை அடைந்தது. இவ்வருவாய் வருமானத்திற்கு தனிப்பட்ட மற்றும் நிறுவன வரிகள் 2024 இன் முதலரைப்பகுதியின் ரூ.359.9 பில்லியனிலிருந்து 2025 இன் முதலரைப்பகுதியில் ரூ.402.4 பில்லியனாக ரூ.42.5 பில்லியன் அதிகரிப்பினால் பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது.

பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள் 2024 இன் முதலரைப்பகுதியின் ரூ.1,043.9 பில்லியனிலிருந்து 2025 முதலரைப்பகுதியில் ரூ.1,365.2 பில்லியனாக 30.8 சதவீதத்தினால் அதிகரித்தன. பெறுமதி சேர் வரி வீதங்களில் அதிகரிப்பிலிருந்து தோன்றிய பெறுமதி சேர் வரியில் இருந்தான வருவாயில் அதிகரிப்பு, மோட்டார் வாகனங்கள் மீதான பெறுமதி சேர் வரி விதிப்பு, பதிவு அடிப்படையளவில் குறைப்பு, பெரும்பாண்மையான விலக்களிப்புகளை அகற்றுதல், நிதியியல் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரியிலிருந்து வருவாய் சேகரித்தலில் அதிகரிப்பு மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அகற்றுதல் என்பவற்றின் மூலம் இது

பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது. இவ்வருவாய்ப் பெறுகையானது 2025 பெப்ரவரி 01 தொடக்கம் வாகன இறக்குமதி மீளத் தொடங்கியமை காரணமாக இறக்குமதி மீதான உற்பத்தித் தீர்வைகளில் இருந்து கிடைத்த வருவாய்களில் கணிசமான அதிகரிப்பு மற்றும் பதிவு அடிப்படை அளவுக் குறைப்பிலிருந்து தோன்றிய சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு அறவீட்டிலிருந்து வருவாய் அதிகரிப்பு என்பன மூலமும் இது பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது.

வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகளிலிருந்தான வருவாய், 2024 இன் முதலரைப்பகுதியின் ரூ.218.2 பில்லியனிலிருந்து 2025 முதலரைப்பகுதியில் ரூ.298.4 பில்லியனாக 36.8 சதவீதத்தினால் அதிகரித்து, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டமை காரணமாக இறக்குமதிகளிலிருந்தான வருவாயில் அதிகரிப்பினை பிரதிபலித்தது. விசேட வியாபாரப்பண்ட அறவீட்டிருந்தான வருவாய் சேகரிப்பானது பிரதானமாக உயர்வான பண்ட இறக்குமதி அளவுகளுடன் இணைந்து ஏறத்தாள ரூ.10 பில்லியன் பங்களித்த உப்பு மற்றும் அரிசி இறக்குமதி காரணமாக ரூ.77.6 பில்லியனாக 70.5 சதவீதத்தினால் அதிகரித்தது. சுங்க இறக்குமதித் தீர்வையிலிருந்தான வருவாய் ரூ.94.0 பில்லியனாக 92.7 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. மோட்டார் வாகன இறக்குமதிகளுக்கு 20 சதவீதம் கொண்ட சுங்க இறக்குமதி தீர்வை மற்றும் ஏற்புடைய சுங்கத் தீர்வை மீதான 50 சதவீதம் மிகைக் கட்டண வரி விதித்தல் மூலம் இது பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்ததுடன் செஸ் வரியிலிருந்தான வருவாய் ரூ.41.5 பில்லியனாக 9.3 சதவீதத்தினால் அதிகரித்தது. துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டிலிருந்தான வருவாய் சேகரிப்பு 0.7 சதவீதத்தினால் சிறிதளவு குறைவடைந்தது.

வரியல்லா வருவாய், 2024 இன் முதலரைப்பகுதியின் ரூ.151.3 பில்லியனிலிருந்து 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.169.6 பில்லியனாக 12.1 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது. அபராதங்கள், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள், வட்டி வருமானம் அத்துடன் சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகள் என்பவற்றிலிருந்து கிடைத்த வருவாயில் அதிகரிப்பு இதற்கு பிரதான காரணமாக அமைந்தது.

அரசாங்கச் செலவினம் 2025 முதலரைப்பகுதியில் ரூ.2,730.7 பில்லியனாக 10.9 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது. 2025 இன் முதலரைப்பகுதியில் மொத்த செலவினத்தின் ஏறத்தாள 91.8 சதவீதத்தை உள்ளடக்குகின்ற மீண்டெழும் செலவினம் 2024 இன் முதலரைப்பகுதியின் ரூ.2,218.4 பில்லியனிலிருந்து 2025 இன் அதேகாலப்பகுதியில் ரூ.2,506.8 பில்லியனாக 13.0 சதவீதத்தினால் அதிகரித்தது. வட்டிச் செலவினம் 2024 இன் முதலரைப்பகுதியின் ரூ.1,142.1 பில்லியனிலிருந்து 2025 முதலரைப்பகுதியில் ரூ.1,264.6 பில்லியனாக 10.7 சதவீத அதிகரிப்பினால் இது முதன்மையாகத் தூண்டப்பட்டு, மொத்த வருவாயின் சுமார் 54.5 சதவீதத்தை ஈர்த்தது. வட்டிச் செலவினத்தில் அதிகரிப்பானது 2024 உடன் ஒப்பிடுகையில் கொள்கை வீதக் குறைப்புகள் மற்றும் மிதமான வட்டிவீதங்களைக் கொண்டிருந்த தாழ்வான பணவீக்கம் என்பவற்றுக்கு மத்தியில் படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் மீது தொடர்ந்தும் தாக்கம் செலுத்திய உயர்வடைந்த நெருக்கடிக்கு முந்திய படுகடன் விளைவுகளின் மரபுரீதியாகப் பெற்றமையை எடுத்துக் காட்டுகின்றது. சம்பளங்களும் கூலிகளும் 2024 இன் முதலரைப்பகுதியின் ரூ.480.3 பில்லியனிலிருந்து 2025 முதலரைப்பகுதியில் ரூ,555.1 பில்லியனாக 15.6 சதவீதத்தினால் அதிகரித்து, 2025 ஏப்ரல் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும்வகையில் அமுல்படுத்தப்பட்ட அரசாங்கத் துறைக்கான அடிப்படைச் சம்பளத் திருத்தத்தின் தாக்கத்தினை பெருமளவில் பிரதிபலித்தது. 2024 ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் ரூ.449.3 பில்லியனிலிருந்து 2025 ஆம் ஆண்டின் முதல் அதேகாலப்பகுதியில் மானியங்கள் மற்றும் நிதியிடமாற்றங்களுகான செலவுகள் 18.1 சதவீதம் அதிகரித்து ரூ. 530.7 பில்லியனாக உயர்ந்துள்ளது. இது மீண்டுவரும் செலவின் 21.2 சதவீதத்தை வகிக்கிறது.

மூலதன மற்றும் தேறிய கடன்வழங்கல் என்பன 2024 இன் முதலரைப்பகுதியின் ரூ.244.9 பில்லியனிலிருந்து 2025 இன் முதலரைப்பகுதியில் ரூ. 223.9 பில்லியனாக 8.6 சதவீதத்தினால் குறைவடைந்தன. மூலதன வரவு செலவுத்திட்டத்தில் தாமதமடைந்த ஒதுக்கீடு இதற்கு பிரதான காரணமாக அமைந்தது. மூலதனச் செலவின ஒதுக்கீடானது 2025 இன் முதல் மூன்று மாதங்களுக்கான செலவினத்தை சமாளிப்பதற்கு வாக்குப்பதிவுக் கணக்கு 2024 டிசெம்பர் 6 ஆம் திகதியன்று அனுமதிக்கப்பட்டமையினால் 2025 இன் முதல் மூன்று மாதக் காலப்பகுதியில் பெருமளவில் தடைப்பட்டிருந்தது. 2025 மார்ச் 21 அன்று 2025 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கான அனுமதியின் பின்னர் மூலதனச் செலவிடல் மீளத் தொடங்கிய போதிலும், 2025 வரவுசெலவுத் திட்டத்தை தாமதமாகத் தொடங்கியமை 2024 இன் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் முதலரைப்பகுதியின் குறைவான மூலதனச் செலவிடல் ஒதுக்கீட்டுக்கு வழிவகுத்தது.

அட்டவணை 2.1 வரவு செலவுத்திட்ட சுருக்கம் (2025 சனவரி - யூன்)

ரூபா.மில்லியன்

விடயம்	2024	2025 (அ)
வருமானம் மற்றும் மானியங்கள்	**1,864,607**	**2,325,104**
வருமானம்	1,860,632	2,321,719
வரி வருமானம்	1,709,305	2,152,087
வரி அல்லாத வருமானம்	151,327	169,632
மானியங்கள்	3,975	3,385
செலவினம்	**2,463,305**	**2,730,707**
மீண்டெழும்	2,218,442	2,506,828
வட்டிக் கொடுப்பனவுகள்	1,142,105	1,264,591
ஏனையவை	1,076,337	1,242,237
அரசாங்க முதலீடுகள்	258,306	228,064
ஏனையவை	-13,443	-4,185
நடைமுறைக் கணக்கு மிகை (+)/ பற்றாக்குறை(-)	**-357,810**	**-185,109**
ஆரம்ப மீதி மிகை (+)/ பற்றாக்குறை(-)	**543,407**	**858,988**
வரவு செலவுத்திட்ட மீதி மிகை (+)/ பற்றாக்குறை(-)	**-598,698**	**-405603**
நிதியீட்டம்	**598,698**	**405,603**
வெளிநாட்டு நிதியீட்டம்	82,885	-120,042
கடன் பெறுகை	167,131	137,715
மீள் கொடுப்பனவுகள்	-84,246	-257,757
உள்நாட்டு நிதியீட்டம்	515,814	525,645
கடன் பெறுகை	1,069,398	1,312,750
மீள் கொடுப்பனவுகள்	-553,585	-787,104

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

அட்டவணை 2.2 மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானமும் செலவினமும் (2025 சனவரி - யூன்)

ரூபா.பில்லியன்

விடயம்	மதிப்பிடப்பட்ட (வருடாந்த)	தற்காலிகமான	அடைவு (%)
மொத்த வருமானம் மற்றும் மானியம்	**4,990**	**2,325**	**46.6**
மொத்த வருமானம்	4,960	2,322	**46.8**
வரி வருமானம்	4,590	2,152	46.9
வரியல்லா வருமானம்	370	170	45.8
மாணியம்	30	3	11.3
மொத்த செலவினம்	**7,190**	**2,731**	**38.0**
மீண்டெழும் செலவினம்	5,886	2,507	42.6
மூலதனச் செலவினம் மற்றும் தேறிய பெறுகைகள்	1,304	224	17.2

மூலம் : தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

2.2 அரசாங்க வருமானம்

கொடைகள் நீங்கலாக வருவாயானது 2024இன் முதலரைப்பகுதியில் பதிவாகிய ரூ.1,709.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ரூ.2,152.1 பில்லியனாக 25.9 சதவீதத்தினால் வரிவருவாயின் அதிகரிப்பின் பிரதான காரணமாக 2024இன் அதேகாலப்பகுதியின் ரூ.1,860.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியின் ரூ.2,321.7 பில்லியனாக 24.8 சதவீதத்தினால் அதிகரித்தது.

அட்டவணை 2.3 வருடாந்த மதிப்பீடு மற்றும் உண்மையான வரி வருமானம் (2025 சனவரி - யூன்)

ரூபா.பில்லியன்

விடயம்	வருடாந்த மதிப்பீடு	2025(அ) (சன - யூன்)
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்		
வருமானம் மற்றும் இலாபங்கள் மீதான வரி	1,167	488
பெறுமதிசேர் வரி - உள்நாட்டு	825	433
தேச கட்டுமான வரி - உள்நாட்டு	190	109
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு - உள்நாட்டு	13	8
உப மொத்தம்	**2,195**	**1,038**
சுங்கத் திணைக்களம்		
இறக்குமதி தீர்வைகள்	240	94
பெறுமதிசேர் வரி - இறக்குமதிகள்	790	354
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு - இறக்குமதி	74	33
துறைமுக விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு	185	85
இறக்குமதி.ஃ.ஏற்றுமதி செஸ்	100	41
வீசேட வியாபார பண்ட அறவீடு	126	78
உற்பத்தி வரி விசேட ஏற்பாடுகள்	599	291
சிகரட்	130	44
பெற்றோலியம்	230	112
மோட்டார் வாகனங்கள் மற்றும் பிற	239	135
ஏனையவை	1	6
உப மொத்தம்	**2,115**	**982**
மதுவரித் திணைக்களம்		
மதுபானம்/புகையிலை	242	109
உப மொத்தம்	**242**	**109**
ஏனையவை		
தொலைத்தொடர்பு அறவீடு	18	8
உரிமப் பத்திர வரி மற்றும் ஏனையவை	20	15
உப மொத்தம்	**38**	**23**
மொத்த வரி வருமானம்	**4,590**	**2,152**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

வரி வருவாயில் அதிகரிப்பிற்கு பின்வருவனவற்றிலிருந்து கிடைத்த வருவாயில் அதிகரிப்பு வழிவகுத்தது.

1. மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தித் தீர்வையானது 2025 சனவரி 11 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பணவீக்கம் சீராக்கப்பட்ட சுட்டியாக்கல் பிரயோகத்துடன் மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி தீர்வை வீதங்கள் 5.9 சதவீதத்தினால் அதிகரித்தமையுடன் ஒன்றிணைந்து 2025 பெப்ரவரி தொடக்கம் நடைமுறைக்கு வந்த அனைத்து வகை மோட்டார் வாகனங்கள் இறக்குமதிகளின் தளர்த்தலுடன் 2025 சனவரி தொடக்கம் யூன் வரையான காலப்பகுதிக்கு 126,829 ஆக 361 சதவீதத்தினால் மோட்டார் வாகன இறக்குமதிகளின் அதிகரிப்பு காரணமாக 335.6 சதவீத்தினால் அல்லது ரூ.99.5 பில்லியனால் அதிகரித்தமை.

2.. 2025 பெப்ரவரி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அனைத்து வகையான மோட்டார் வாகனங்களினதும் இறக்குமதித் தளர்த்தல் காரணமாக இறக்குமதி மீதான பெறுமதி சேர் வரி ரூ.354.0 பில்லியனாக 34.3 சதவீதத்தினால் அதிகரித்தமை மற்றும் உள்நாட்டு நடவடிக்கைகளில் விரிவடைதல் இருந்து தோன்றிய உள்நாடு மீதான பெறுமதி சேர் வரி ரூ.433.4 பில்லியனாக 22.6 சதவீதத்தினால் அதிகரித்தமை, பெறுமதி சேர் வரி வீதம் 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக அதிகரித்தமை அத்துடன் பெறுமதி சேர் வரிப்பதிவு அடிப்படை அளவு ஆண்டுக்கு ரூ.80 மில்லியனிலிருந்து ரூ.60 மில்லியனாக குறைக்கப்பட்டமை என்பவற்றின் முழுமையான தாக்கம் மற்றும் 2024 இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியின் பெறுமதி சேர் வரிப்பதிவுகள் 27,261 கோவைகளாக 44.2 சதவீத அதிகரிப்பை பிரதிபலிக்கும் நிர்வாக ரீதியான வழிமுறைகள் என்பன காரணமாக பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 27.6 சதவீதத்தினால் அல்லது ரூ. 170.4 பில்லியனால் அதிகரித்தது.

3. சுங்க இறக்குமதித் தீர்வையானது பிரதானமாக ஏற்புடைய சுங்க இறக்குமதித் தீர்வை மீதான 50.0 சதவீத மிகைக் கட்டண மற்றும் தொடர்புடைய காலப்பகுதியில் இறக்குமதிப் பொருட்களின் அதிகரிப்பு என்பவற்றுடன் சேர்த்து மோட்டார் வாகங்கள் மீது சுங்க இறக்குமதித் தீர்வையின் 20.0 சதவீதம் கொண்ட பிரயோகம் காரணமாக 92.7 சதவீதத்தினால் அல்லது ரூ.45.2 பில்லியனால் அதிகரித்தது.

4. வருமான வரிகள், தனிப்பட்ட வருமான வரிப்பதிவுகள் 1.1 மில்லியனாக 45.4

சதவீதத்தினால் அதிகரித்தமை மற்றும் நிறுவன வரிப்பதிவுகள் 111,824 ஆக 23 சதவீதத்தினால் அதிகரித்தமை என்பவற்றைப் பிரதிபலித்து வரிநிர்வாக வழிமுறைகளை வலுப்படுத்தியதுடன் ஒன்றிணைந்து உயர்வான சம்பளங்கள் மற்றும் வருவாய்களைப் பிரதிபலித்து உழைக்கும் போது செலுத்தும் வரி ரூ.113.4 பில்லியனாக 13.2 சதவீதத்தினாலும் தனிப்பட்ட வருமான வரி ரூ.30.8 பில்லியனாக 37.4 சதவீத்தினாலும் அதிகரித்ததன் பிரதான காரணமாக 9.2 சதவீதத்தினால் அல்லது ரூ.41.3 பில்லியனால் அதிகரித்தது.

5. விசேட வியாபாரப் பண்ட அறவீடு முக்கிய பண்டங்களின் இறக்குமதிகளின் அளவில் அதிகரிப்புடன் ஒன்றிணைந்து உருளைக்கிழங்கு மற்றும் வெங்காய இறக்குமதிக்கான அதிகரித்த வீதங்களினால் தூண்டப்பட்டு 70.5 சதவீதத்தினால் அல்லது ரூ.32.1 பில்லியனால் அதிகரித்தது.

6. சமூகப்பாதுகாப்பு பங்களிப்பு அறவீடானது, 2024 இன் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2025இன் முதலரைப்பகுதியின் சமூகப்பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டு பதிவுகளின் எண்ணிக்கை 13,975 ஆக 36.5 சதவீத வளர்ச்சியினைப் பிரதிபலித்து, மேம்பட்ட வரி நிர்வாக வழிமுறைகளுடன் இணைந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நடவடிக்கைகளின் விரிவாக்கத்தினால் தூண்டப்பட்டு 18.7 சதவீதத்தினால் அல்லது ரூ.22.3 பில்லியனால் அதிகரித்தது.

7. பெற்றோலியம் மீதான உற்பத்தி தீர்வை மோட்டார் வாகன இறக்குமதிகள் தளர்த்தப்பட்டமையுடன் பெற்றோல் மற்றும் டீசலுக்கான அதிகரித்த கேள்வியுடன் ஒன்றிணைந்து 2024 இன் அதேகாலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் 15.0 சதவீதத்தினால் பெற்றோலிய இறக்குமதிகளில் அதிகரிப்பு மூலம் தூண்டப்பட்டு 15.5 சதவீதத்தினால் ரூ.15.0 பில்லியனால் அதிகரித்தது.

8. மதுபானம் மீதான மதுவரி, இணங்குவித்தலின் அதிகரிப்புடன் ஒன்றிணைந்து 2025 சனவரி 11 தொடக்கம் நடைமுறைக்கு வந்த பணவீக்கம் சீராக்கப்பட்ட சுட்டியாக்கத்தின் பிரயோகத்துடன் மது தீர்வை வீதங்கள் 5.9 சதவீதத்தினால் அதிகரித்தமையின் பிரதான காரணங்களினால் 9.2 சதவீதத்தினால் அல்லது ரூ.9.1 பில்லியனால் அதிகரித்தது.

9. செஸ் வரியானது இறக்குமதிகளின் அதிகரிப்பு காரணமாக 9.3 சதவீதத்தினால் அல்லது ரூ.3.5 பில்லியனால் அதிகரித்தது.

வரைபு 2.1 : அரச வருமானத்தின் பங்குகள் (2025 சன - யூன்)



மூலம் - அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

அட்டவணை 2.4 அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம் (2025 சன - யூன்)

ரூபா.மில்லியன்

விடயம்	2024	2025(அ)	வளர்ச்சி %
வரி வருமானம்	**1,709,305**	**2,152,087**	**25.9**
வருமான வரி	447,252	488,506	9.2
உள்நாட்டு நுகர்வு அடிப்படையிலான வரி	600,370	699,990	16.6
பெறுமதி சேர் வரி	353,392	433,364	22.6
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு	91,187	108,561	19.1
உற்பத்தி வரி	155,695	158,023	1.5
தேச கட்டுமான வரி	95	43	-55.1
இறக்குமதி அடிப்படையிலான வரி	636,469	926,988	45.6
சுங்கத் தீர்வை	48,758	93,952	92.7
பெறுமதிசேர் வரி	263,552	353,967	34.3
தேச கட்டுமான வரி	3	405	...
துறைமுக விமானநிலைய அபிவிருத்தி அறவீடு	85,992	85,431	-0.7
விசேட வியாபார பண்ட அறவீடு	45,500	77,579	70.5
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு	28,115	33,061	17.6
உற்பத்தி வரி	126,636	241,136	90.4
செஸ் அறவீடு	37,914	41,456	9.3
உரிமப் பத்திர வரிகள் மற்றும் ஏனையவை	25,214	36,604	45.2
வரி அல்லாத வருமானம்	**151,327**	**169,632**	**12.1**
மொத்த வருமானம்	**1,860,632**	**2,321,719**	**24.8**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

2025 இன் முதலரைப்பகுதியின் 12.1 சதவீதத்தினால் அல்லது ரூ.18.3 பில்லியனால் வரியல்லா வருவாய்களின் அதிகரிப்பும் வருவாயில் உயர்வுக்குப் பங்களித்தது. வட்டி வருமானத்திலிருந்தான வருவாயில் ரூ.10.1 பில்லியன், தண்டப் பணங்கள், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் ரூ.2.3 பில்லியனால் அதிகரிப்பிலிருந்து வருவாயில் அதிகரிப்பு பிரதானமாக இதற்கு வழிவகுத்தது. அதேவேளை, அதேகாலப்பகுதியில் சமூகப்பாதுகாப்பு பங்களிப்பிலிருந்தான வருவாய் ரூ.9.8 பில்லியனாக அதிகரித்து உயர்வான பொதுத்துறைச் சம்பளங்கள் கூலிகள் அதேபோன்று 2024 ஏப்பிரல் தொடக்கம் நடைமுறைக்கு வந்த அனைத்து அரசாங்க ஊழியர் அனைவருக்குமான விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கான பங்களிப்பில் 8 சதவீத அதிகரிப்பு என்பவற்றைப் பிரதிவலித்தது.

வரி வருமானம்

2025 இன் முதலரைப்பகுதியின் வரிவருவாய் ரூ.2,152.1 பில்லியன் தொகையாகவிருந்து ரூ.2,321.7 பில்லியன் கொண்ட அரசாங்கத்தின் மொத்த வருவாயின் (கொடைகள் நீங்கலாக) 92.7 சதவீதத்திற்கு வகைகூறியது. பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, உற்பத்தித் தீர்வை மற்றும் வெளிநாட்டு வர்த்தக வரிகள் என்பவற்றின் அதிகரித்த சேகரிப்புகள், மொத்த வரிவருவாயில் நேரடி வரிகளின் பங்கினை 2024 இன் அதேகாலப்பகுதியின் 26.2 சதவீத்திலிருந்து 2025 இன் முதல் ஆறுமாதங்களில் 22.7 சதவீதமாக வீழ்ச்சியடைவதற்கு காரணமாகின. 2025 இன் நடுப்பகுதியளவில் வரி வருவாய் சேகரிப்பு ரூ.4,590.0 பில்லியன் கொண்ட வருடாந்த மதிப்பீட்டின் 46.9 சதவீதத்தை அடைந்திருந்தது.

வருமான வரி

வருமான வரிகளிலிருந்தான வருவாய் சேகரிப்பானது மேம்படுத்தப்பட்ட இணங்குவித்தல் வழிமுறைகள் மற்றும் சில விலக்களிப்புகளை அகற்றுதல் மூலம் துணையளிக்கப்பட்டு பிரதானமாக உயர்வான நிறுவன வருமான வரி மற்றும் முற்பண தனிப்பட்ட வருமான வரிக் கொடுப்பனவுகள் காரணமாக 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.447.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இல் முதல் ஆறு மாதங்களில் ரூ.488.5 பில்லியனாக 9.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.

முற்பண தனிப்பட்ட வருமான வரியிலிருந்தான வருவாய் 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.100.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இல் முதல் ஆறு மாதங்களில் ரூ.113.4 பில்லியனாக 13.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. நிறுவன வருமான வரியும் ரூ.237.4 பில்லியனிலிருந்து ரூ.258.3 பில்லியனாக 8.8 சதவீதத்தினால் வருவாயில் அதிகரிப்பை விளைவித்தது. பணிகள் ஏற்றுமதி மீது 15 சதவீத வரிவிதிப்புடன் ஒன்றிணைந்து 2025 ஏப்பிரல் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மதுபானம், புகையிலை பந்தயம் மற்றும் சூதாட்ட தொழிற்றுறைகளுக்கான நிறுவன வருமான வரிவீதத்தில் 40 சதவீதத்திலிருந்து 45 சதவீதமாக மேல் நோக்கிய சீராக்கம் வரித் தளத்தை விரிவுபடுத்தல் மற்றும் வளர்ச்சியடைகின்ற வெளிநாட்டு செலாவணி வருவாய்களுடன் சேர்த்து துறையொன்றினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதல் மூலம் வரவிருக்கும் காலப்பகுதியில் சேகரிப்புகள் மேலும் வலுப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தனிப்பட்ட வருமான வரியிலிருந்தான வருவாயானது 2025 சனவரி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசாங்கத்துறையில் கணிசமான சம்பளத் திருத்தங்கள் மற்றும் 2025 ஏப்பிரல் தொடக்கம் தனியார் துறையில் குறைந்தபட்ச சம்பளங்களின் மேலோக்கிய சீராக்கம் என்பன உள்ளடங்கலாக சம்பள மட்டங்களில் அதிகரிப்பினால் பெருமளவில் தூண்டப்பட்டு ரூ.22.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ30.7 பில்லியன் தொகையாகி 37.4 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.. வட்டி மீதான பிடித்துவைத்தல் வரியிலிருந்தான வருவாய் 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.87.1 பில்லியனிலிருந்து 2025 முதலரைப்பகுதியில் ரூ.86.1 பில்லியனாக 1.2 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. வட்டி வருமானம் மீதான பிடித்துவைத்தல் வரிவீதத்தில் 5 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமான அதிகரிப்புக்கு மத்தியில் இச்சிறிதளவு குறைவு இடம்பெற்றதுடன் பொருளாதாரம் உறுதியடைந்து, பணவீக்கம் வெற்றிகரமாக கட்டுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து 2025 இல் இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட வீதக்குறைப்புகள் இதற்கு முதன்மைக் காரணமாக அமைந்தன.

அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட வரி நிருவாகத்தை வலுப்படுத்தலுக்கான வழிமுறைகள் வருமான வரி வருவாய்ச் சேகரிப்பில் குறிப்பிடப்பட்ட அதிகரிப்புக்கு பங்களித்தன. ஏனையவற்றுக்கு மத்தியில் மீளளிப்பு செயன்முறையை சீரமைத்தல் மற்றும் மிகையாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகைகளின் மீளளிப்பை விரைவுபடுத்தல், தனிப்பட்ட வருமான வரி செலுத்துனர்களுக்கான இலத்திரனியல் வரி கோவைப்படுத்தலை கட்டாயமாக்குதல், தனிப்பட்ட மட்டத்தில் வரிசெலுத்துநர் கொடுக்கல்வாங்கல் தகவல்களை உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதை நிதியியல் நிறுவனங்களின் கடப்பாடாக்குதல். வரி நோக்கங்களுக்கான செலவுகளாகக் குறைக்கப்படுவதற்கு ஒரு நாளில் அல்லது தனியொரு பரிவர்த்தனையில் அல்லது தனியொரு நிகழ்வில் மொத்தமாக ரூ.500,000 அல்லது அதற்கு மேல் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை அனுமதிக்காமை மூலம் காசுக் கொடுக்கல்வாங்கல்களை ஊக்கமிழக்கச் செய்தல், அரசாங்க நிறுவனங்கள் உள்ளடங்கலாக ஆட்களினால் உள்நாட்டு இறைவரித்திணைக்கள ஆணையாளருடன் தகவல்களை கிரமமாக பகிர்ந்து கொள்வதை குறித்துரைக்கின்ற ஒழுங்குவிதியொன்றினை வழங்குதல் என்பவற்றை இவ்வழிமுறைகள் உள்ளடக்குகின்றன. இந்நிர்வாக முன்முயற்சிகளும் 2025இன் முதல் ஆறு மாதங்களில் நிறுவன வருமான வரியின் வரிக்கான புதிய பதிவுகள் 23 சதவீதத்தினாலும் தனிப்பட்ட வருமான வரிக்கான புதிய பதிவுகள் 45 சதவீத உயர்வுடனும் வரி செலுத்துநர் தளத்திற்கு ஆதரவளித்தன.

அட்டவணை 2.5 வருமான வரி மூலமான வருமானங்களின் செயலாற்றுகை (2025 சன - யூன்)

ரூபா.மில்லியன்

விடயம்	2024	2025(அ)	மாற்றம் %
நிறுவன மற்றும் நிறுவனமல்லாத	259,742	289,055	11.3
உழைக்கும் போது செலுத்தும் வரி / உயர் தனிநபர் வருமான வரி	100,177	113,364	13.2
பொருளாதார சேவைக்கட்டணம்	237	17	-92.9
நிறுத்தி வைத்தல் வரி	87,096	86,070	-1.2
மொத்தம்	447,252	488,506	9.2

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

பெறுமதி சேர் வரி

பெயரளவு நியதிகளில் பெறுமதி சேர்வரியிலிருந்தான வருவாய் 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.616.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ரூ.787.3 பில்லியனாக 27.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து, 2025 இற்கான ஆண்டு மதிப்பீட்டின் 48.8 சதவீதத்தினை அடையப்பெற்றது. உள்நாட்டு நடவடிக்கைகளில் இருந்தான பெறுமதி சேர் வரி வருவாய் 2025 இன் முதலரைப்பகுதியில் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைந்ததன் காரணமாக ரூ.433.4 பில்லியனாக 22.6 சதவீதத்தினால் அதிகரித்து. இறக்குமதிகளில் இருந்தான பெறுமதி சேர்க்கப்பட்ட வரிவருவாய் 2025 இன் முதலரைப்பகுதியில் ரூ.354.0 பில்லியனாக 34.3 சதவீதமாக அதிகரித்தது. இவ்வளர்ச்சியானது 2025 பெப்ரவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவந்த அனைத்துவிதமான வாகனங்கள் மீதுமான இறக்குமதித் தடையினை நீக்கியமையினால் தூண்டப்பட்டிருந்தது.

அட்டவணை 2.6 பெறுமதி சேர் வரி மூலமான வருமானங்களின் செயலாற்றுகை (2025 சன - யூன்)

ரூ.மில்லியனில்

விடயம்	2024	2025(அ)	வளர்ச்சி %
உள்நாட்டு	353,392	433,364	22.6
இறக்குமதி	263,552	353,967	34.3
மொத்த வருமானம்	**616,944**	**787,331**	**27.6**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ)தற்காலிகமானது

உற்பத்தி தீர்வை மற்றும் மது வரி

உற்பத்தித் தீர்வை மற்றும் மதுவரியிலிருந்து ஈட்டப்பட்ட வருவாய் 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.282.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியின் ரூ.399.2 பில்லியனாக 41.4 சதவீதத்தினால் அதிகரித்தது. சிகரட்டில் இருந்தான வருவாயில் வீழ்ச்சிக்கு மத்தியில் மோட்டார் வாகனங்கள், பெற்றோலியம், மதுபானம் மற்றும் ஏனைய உற்பத்தி வரி விதிக்கத்தக்க பொருட்கள் என்பவற்றிலிருந்து கிடைத்த உயர்வான வருவாயினால் இவ்வளர்ச்சி பிரதானமாக தூண்டப்பட்டிருந்தது. உற்பத்தித் தீர்வையிலிருந்து கிடைத்த வருவாயானது 2025 இன் முதலரைப்பகுதியின் மொத்த வரி வருவாயின் 18.6 சதவீதத்திற்கும் மொத்த வரி சேகரிப்பின் 17.2 சதவீதத்திற்கும் வகைகூறிய அதேவேளையில் ஆண்டு மதிப்பீட்டின் 47.6 சதவீதத்தினை அடைந்தது.

மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தித் தீர்வையில் கிடைந்த வருவாய் 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.29.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப் பகுதியில் 129.1 பில்லியனாக 335.6 சதவீதத்தினால் சடுதியாக அதிகரித்தது. 2025 பெப்ரவரி 01 தொடக்கம் நடைமுறைக்கு வந்த மோட்டார் வாகன இறக்குமதிகள் மீதான தற்காலிக கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டமை இதற்கு பிரதான காரணமாக அமைந்தது.

பெற்றோலிய உற்பத்திகளில் இருந்து கிடைத்த உற்பத்தித் தீர்வை வருவாய் 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.97.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியின் ரூ.112.0 சதவீதமாக 15.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இவ்வதிகரிப்புக்கு 2025 இன் முதலரைப்பகுதியின் உயர்வடைந்த கேள்வி மற்றும் வலுவடைந்த பொருளாதார நடவடிக்கைகள் என்பவற்றிலிருந்து தோன்றிய உயர்வான எரிபொருள் இறக்குமதிகள் முதன்மைக் காரணமாக அமைந்தது.

அட்டவணை 2.7 உற்பத்தி தீர்வை வரி மற்றும் மது வரி செயலாற்றுகை (2025 சன - யூன்)

ரூபா.மில்லியன்

விடயம்	2024	2025(அ)	வளர்ச்சி %
மதுபானம்	99,116	108,240	9.2
சிகரெட்டு	53,624	44,023	-17.9
மோட்டார் வாகனங்கள்	29,649	129,146	335.6
பெற்றோலியம்	96,987	111,990	15.5
ஏனையவை	2,956	5,760	94.8
மொத்தம்	**282,331**	**399,159**	**41.4**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

அதேவேளை, இனிப்பூட்டப்பட்ட குளிர்பானங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், ஈச்சமர எண்ணெய் மற்றும் கொழுப்பு அமிலங்கள் உள்ளடங்கலாக ஏனைய உற்பத்தி வரி விதிக்கத்தக்க பொருட்கள் மீதான உற்பத்தித் தீர்வையிலிருந்து கிடைத்த வருவாய், 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.3.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியின் ரூ.5.8 பில்லியனாக 94.8 சதவீதத்தினால் சடுதியாக அதிகரித்தது. வருடாந்த பணவீக்க சீராக்கம் செய்யப்பட்ட சுட்டியாக்க பொறிமுறைகளின் கீழ் 2025 சனவரி 11 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் உற்பத்தி தீர்வை வீதங்கள் 5.9 சதவீதம் கொண்ட மேல்நோக்கிய திருத்தம் அதேபோன்று 2025 இன் முதலரைப்பகுதியின் உயர்வடைந்த கேள்வி மற்றும் வலுவடைந்த பொருளாதார நடவடிக்கை மூலம் தூண்டப்பட்ட உயர்வான இறக்குமதிகள் என்பன இவ்வளர்ச்சிக்கு பிரதான காரணமாக அமைந்தன. எனினும், சிகரட்டிலிருந்து கிடைத்த வருவாய் 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.53.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியின் ரூ.44.0 பில்லியனாக 17.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது.

வரைபு 2.2 : உற்பத்தி தீர்வை மற்றும் மதுவரிச் செயலாற்றுகை (2024/2025 சன - யூன்)



மூலம் - அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

2025 சனவரி 11 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மது வரி 5.9 சதவீதத்தினால் அதிகரித்தமை காரணமாக மதுபானத்திலிருந்து கிடைத்த வருவாய், 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.99.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியின் ரூ.108.2 பில்லியனாக 9.2 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்த மதுபான உற்பத்தி 2024 இன் அதேகாலப்பகுதியின் 15.9 மில்லியன் முழுமையான லீற்றர்களுடன் ஒப்பிடுகையில் 2023 மட்டங்களுக்கு திரும்பலடைந்து 2025 முதலரைப்பகுதியில் 17.4 மில்லியன் முழுமையான லீற்றர்கலாக 9.6 சதவீதத்தினால் மீண்டது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வன் மதுபானத்திலிருந்து கிடைத்த வருவாய் 2024 இன் அதேகாலப்பகுதியின் சேகரித்த ரூ.61.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியின் ரூ.77.1 பில்லியனாக 24.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. எனினும் மென் மதுபானத்திலிருந்து கிடைத்த வருவாய் 228 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்த அதேவேளை, முளைத்தானிய மதுபானத்திலிருந்து கிடைத்த வருவாய் 7.1 சதவீதத்தினால் மிதமாக அதிகரித்தது. 2025 இன் முதலரைப்பகுதியின் வருடாந்த மதிப்பீட்டுக்கு எதிராக மதுபானம் மீதான உற்பத்தித்தீர்வையிலிருந்து கிடைத்த வருவாயின் அடைவு 45.1 சதவீதமாகவிருந்தது.

ஏனைய வரிகள்

ஏனைய வரிகளிலிருந்து ஈட்டப்பட்ட வருவாய், 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.362.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியின் ரூ.477.1 பில்லியனாக 31.5 சதவீதத்தினால் அதிகரித்தது.

சுங்க இறக்குமதி தீர்வை விதங்களின் மேல்நோக்கித் திருத்தத்தின் காரணமாக 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.48.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ரூ.94.0 பில்லியனாக 92.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.

செஸ் வரியிலிருந்து கிடைத்த வருவாய், 2023 இன் மூன்றாம் காலாண்டின் இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை காரணமாக 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.37.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ரூ.41.5 பில்லியனாக 9.3 சதவீதத்தினால் அதிகரித்தது. அதற்கமைய, இறக்குமதிகளிலிருந்தான செஸ் வரி வருவாய் 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.35.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ரூ.40.8 பில்லியனாக 15.0 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, ஏற்றுமதிகளிலிருந்தான செஸ் வரி வருவாய் 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.1.0 பில்லியனிலிருந்து 2025 இன் முதலரைப்பகுதியின் ரூ.0.6 பில்லியனாக 39.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இக்காலப்பகுதியின் போது செஸ் வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட வருவாய் 2025 இற்கான ரூ. 100.0 பில்லியன் ஆண்டு மதிப்பீட்டின் 41.5 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது.

துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டிலிருந்து கிடைத்த வருவாய் 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.86.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ரூ.85.4 பில்லியனாக 0.7 சதவீதத்தினால் குறைவடைந்தது. இத்தொகை 2025 இற்கான ரூ. 185 பில்லியன் ஆண்டு மதிப்பீட்டின் 46.2 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது.

விசேட வியாபார பண்ட அறவீட்டிலிருந்து கிடைத்த வருவாய், சீனி, உருளைக்கிழங்கு மீதான தொடர்ச்சியான உயர்வான வீதங்கள், உப்பு மற்றும் அரிசி இறக்குமதி மற்றும் விலையான பொருளாதார வீழ்ச்சியின் விளைவாக அதிகரித்த இறக்குமதி அளவுகள் என்பவற்றுடன் 2023 இன் மூன்றாம் காலாண்டின் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் மூலம் தூண்டப்பட்டு ரூ.77.6 பில்லியனாக 70.5 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது.

சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டிலிருந்து கிடைத்த வருவாய், 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.119.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ரூ.141.6 பில்லியனாக 18.7 சதவீதத்தினால் உயர்வடைந்து, இறக்குமதிகள் மற்றும் உள்நாட்டு நடவடிக்கைகள் இரண்டிலிருந்தும் வருவாயில் வளர்ச்சியினை எடுத்துக் காட்டியது. தொலைத் தொடர்பு அறவீட்டிலிருந்தான வருவாய் 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.8.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ரூ.8.0 பில்லியனாக 9.1 சதவீதத்தினால் குறைவடைந்தது. அதேவேளை, மோட்டார் வாகன வரிகள் மற்றும் வேறு தொடர்புபட்ட வரிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட வருவாய் 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.16.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ரூ.28.6 பில்லியனாக 74.3 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. இச்செயலாற்றம் 2025 இற்கான ரூ. 34 பில்லியன் ஆண்டு மதிப்பீட்டின் 84.1 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

வரி அல்லாத வருமானம்

வரியல்லா வருவாய், 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.151.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ரூ.169.6 பில்லியனாக 12.1 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வளர்ச்சிக்கு பிரதானமாக அபராதங்கள், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள், வட்டிவருமானம் அத்துடன் சமூகப்பாதுகாப்பு

பங்களிப்புகள் என்பவற்றிலிருந்து கிடைத்த உயர்வான வருவாய் காரணமாக அமைந்தது.

அபராதங்கள், கட்டணங்கள் மற்றும் அறவீடுகளிலிருந்து கிடைத்தத வருவாய் 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.79.3 பில்லியனிலிருந்து 2025 இன் முதலரைப்பகுதியில் ரூ.81.6 பில்லியனாக 2.9 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வருமான வகை, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், குடிவரவு குடியகழ்வுத் திணைக்களம், ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம் என்பன மூலம் வழங்கப்படும் சேவைகளுக்கான அதிகரித்த கேள்வியின் மூலம் தூண்டப்பட்டு மொத்த வருவாயின் 48.3 சதவீதத்திற்கு வகைகூறுகின்றது.

அதேபோன்று வட்டி வருமானமானது 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.23.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ரூ.33.5 பில்லியனாக 43.1 சதவீதத்தினால் அதிகரித்தது. அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சியிலிருந்தான இலாபம் மற்றும் பங்கிலாபக் கிடைப்பனவுகள் 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.14.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ரூ.12.2 பில்லியனாக 18.1 சதவீதத்தினால் குறைவடைந்தன. சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகளிலிருந்து கிடைத்த வருவாய் 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.19.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ரூ.29.5 பில்லியனாக 49.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. வாடகை வருமானத்திலிருந்து கிடைத்த வருவாய் 2024 இன் அதேகாலப்பகுதியின் ரூ.3.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025 இன் முதலரைப்பகுதியில் ரூ2.7 பில்லியனாக 15.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஒட்டுமொத்தமாக 2025 இன் முதலரைப்பகுதியில் சேகரிக்கப்பட்ட வரியல்லாத வருவாய் 2025 இற்கான ரூ.370.0 பில்லியன் கொண்ட ஆண்டுமதிப்பீட்டின் 45.8 சதவீதத்திற்கு வகைகூறியது.

அட்டவணை 2.8 அரசாங்க வருமான மாறுபடுதலுக்கான பகுப்பாய்வு

ரூ.பில்லியனில்

விடயம்	2024 சன – ஜுன்	2025 வருடாந்த மதிப்பீடு	2025 (அ) சன – ஜுன்	மாறுபடுதலுக்கான முக்கிய காரணங்கள்
வருமான வரி	447.3	1,167.0	488.5	ஆண்டு மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் வரி வருமானம் 41.9 சதவீதமாக ஆக இருந்தது. இதற்கு முக்கியமான காரணங்களாக, - 2024ம் ஆண்டின் இரண்டாம் பாதியுடன் ஒப்பிடுகையில், 2025ம் ஆண்டின் முதல் பாதியில் வரி கோப்புகளின் பதிவு எண்ணிக்கை 43 சதவீதம் அதிகரித்து 1,238,653 ஆக உயர்ந்ததுடன் வரி நிர்வாக நடவடிக்கைகளும் மேம்படுத்தப்பட்டமை. - வட்டிக்கு விதிக்கப்படும் WHT விகிதம் 2025.04.01 முதல் 5 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாக உயர்த்தப்பட்டமை. - அரச மற்றும் தனியார் துறைகளின் ஊதியங்கள் அதிகரிக்கப்பட்டது. - பொருளாதார செயல்பாடுகள் படிப்படியாக விரிவடைந்தமை. குறைந்த கொள்கை வட்டி விகிதங்களின் ஒருங்கிணைந்த விளைவு மற்றும் வரி விதிக்கக்கூடிய வருமானத்தை வரிப் பொறுப்பு வரம்புக்குக் கீழே அறிவித்த தனிநபர்களுக்கு வழங்கப்பட்ட விலக்கு காரணமாக. பிடித்து வைத்தல் வரி (WHT) விகிதங்கள் உயர்த்தப்பட்டிருந்த போதிலும் 2025ம் ஆண்டின் முதற் பாதியில் பிடித்து வைத்தல் வரி (WHT) வருமான வசூல் 2024 ஆம் ஆண்டின் அதே காலத்துடன் ஒப்பிடுகையில் 1.2 சதவீதம் குறைந்து.
பெறுமதி சேர் வரி (VAT)	616.9	1,615.0	787.3	2025ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் கடந்த ஆண்டு இதே காலத்துடன் ஒப்பிடும் போது பெறுமதி சேர் வரி வருமானம் 27.6 சதவீதம் அதிகரித்து ரூ.787.3 பில்லியனாக உயர்ந்துள்ளது. இது ஆண்டு மதிப்பீட்டின் 48.8 சதவீதத்தை அடைந்துள்ளது.இவ்வடைவுக்கான காரணங்கள், - மோட்டார் வாகனங்களின் ஏற்றுமதிக்கான தடைகள் தளர்த்தப்பட்டமை. - தேறிய ஏற்றுமதி 12.4 சதவீதத்தால் உயர்வடைந்தமை.. - உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைந்தமை..

ரூ.பில்லியனில்

விடயம்	2024 சன – ஜூன்	2025 வருடாந்த மதிப்பீடு	2025 (அ) சன – ஜூன்	மாறுபடுதலுக்கான முக்கிய காரணங்கள்
உற்பத்தித் தீர்வை மற்றும் மது வரி	282.3	841.0	399.2	உற்பத்தித் தீர்வை மற்றும் மது வரி வருமானம் 2025ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் கடந்த ஆண்டு இதே காலத்துடன் ஒப்பிடும் போது, 41.4 சதவீதம் அதிகரித்து ரூ399.2 பில்லியனாக உயர்ந்துள்ளது. இது ஆண்டு மதிப்பீட்டில் 47.6 சதவீதத்தை அடைந்துள்ளது. இவ்வடைவுக்கான காரணங்கள்,˙ - மோட்டார் வாகன இறக்குமதிகளில் உள்ள அனைத்து தடைகளும் 2025 பெப்ரவரி மாதம் தளர்த்தப்பட்டதுடன் மோட்டார வாகனங்களுக்கான உற்பத்தித் தீர்வை வருமானம் அதிகரித்தமை. - மோட்டார் வாகனங்கள், சிகரட், இனிப்பூட்டப்பட்ட குடிபானங்கள் உள்ளிட்ட உற்பத்தித் தீர்வைக்குட்பட்ட பொருட்களுக்கான உற்பத்தித் தீர்வை 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் படி வருடாந்த பணவீக்க சீராக்கல் குறியீட்டின் அடிப்படையில் 5.9 சதவீதம் அதிகரிக்கப்பட்டமை. - மதுபானங்களுக்கான மது வரி வருடாந்த பணவீக்க சீராக்கல் குறியீட்டின் அடிப்படையில் 5.9 சதவீதம் அதிகரிக்கப்பட்டமை. - பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி அதிகரித்ததால் பெற்றோலியத்துக்கான வருமானம் 15.5 சதவீதத்தால் உயர்வடைந்தமை. - இனிப்பூட்டப்பட்ட பானங்கள் குளிர்சாதனப்பெட்டிகள் மற்றும் பாம்.்.பனை எண்ணெய் போன்ற பிற உற்பத்தித் தீர்வைக்குட்பட்ட பொருட்களிலிருந்து பெறப்பட்ட வருமானம் 94.8 சதவீதம் அதிகரித்து ரூபா 5.8 பில்லியனாக உயர்ந்தமை. இருப்பினும் சிகரெட்டுகளில் இருந்து பெறப்பட்ட வருமானம் 17.9 சதவீதத்தால் குறைந்தமை மதிப்பாய்வுக்காலத்தில் உற்பத்தித் தீர்வை வரி வருமானத்திற்கு எதிர் மறையாக பங்களிப்புச் செய்தது.
இறக்குமதி தீர்வை	48.8	240.0	94.0	2025 ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டுக்கு எதிராக இறக்குமதித் தீர்வை 39.1 சதவீத அடைவாகும். இதற்கான காரணம் - மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்கான சுங்க இறக்குமதித் தீர்வை 2025.01.28 முதல் 20 சதவீதமாக அதிகரிக்கப்பட்டமை. - 2025.02.01 ஆம் திகதி மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்காக விதிக்கப்படும் இறக்குமதி தீர்வைக்கு மிகைக் கட்டணமொன்று விதிக்கப்பட்டமை. - 2025ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் ஏற்றுமதி வருமானம் 12.4 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டமை.
துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு (PAL)	86.0	185.0	85.4	துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (PAL) மூலம் கிடைத்த வருமானம் 2025ம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் 0.7 சதவீதத்தால் ரூ. 85.4 பில்லியனாக உள்ளது. இது ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் 46.2 சதவீதம் மட்டுமே ஆகும். இக்குறைவுக்கான காரணங்கள், - 2024 மார்ச் 29 முதல் நடைமுறைக்கு வரும் இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் விதிகளின்படி சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களில் 3,117 பொருட்களுக்கு சலுகை வீதங்கள் வழங்கப்பட்டதும், 595 பொருட்கள் வரிவிலக்கு அளிக்கப்பட்டதும் ஏற்படுத்தும் முழுமையான தாக்கம் உணரப்பட்டது. - மதிப்பீட்டுக் காலப்பகுதியில் துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு விதிக்கப்படும் பொருட்களின் இறக்குமதி அளவு குறைந்தமை

ரூ.பில்லியனில்

விடயம்	2024 சன – ஜூன்	2025 வருடாந்த மதிப்பீடு	2025 (அ) சன – ஜூன்	மாறுபடுதலுக்கான முக்கிய காரணங்கள்
விசேட வியாபார பண்ட அறவீடு	45.5	126.0	77.6	விசேட வியாபார பண்ட அறவீடு 2025ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் கடந்த ஆண்டு இதே காலத்துடன் ஒப்பிடும் போது , 70.5 சதவீதம் அதிகரித்தது.இதனால் 2025ம் ஆண்டுக்கான ஆண்டு மதிப்பீட்டில் 61.6 சதவீதத்தை அடைந்துள்ளது. இவ்வடைவுக்கான காரணங்கள், - உருளைக்கிழங்கு , அரிசி மற்றும் உப்புக்கு விதிக்கப்பட்ட வரி விகிதங்கள் உயர்த்தப்பட்டமை. - தானியங்கள் மற்றும் அரைக்கும் பொருட்கள் , பால் உற்பத்திகள் எண்ணைய் மற்றும் கொழுப்பு போன்ற முக்கிய பொருட்களின் இறக்குமதி மதிப்பு 29.8 சதவீதம் அதிகரித்தமை.
சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு	119.3	264.0	141.6	சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (SSCL)மூலம் கிடைத்த வருமானம் 2025ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 18.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இது ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 53.6 சதவீதம் ஆகும். இவ்வடைவுக்கான காரணங்கள், - 2025 ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இறக்குமதிகள் அதிகரித்ததின் தாக்கம். - உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைந்தமை..
இதர வரிகள்	63.2	152.0	78.5	இதர வரிகளில் இருந்து கிடைத்த வருமானம் 2025ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 24.2 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 78.5 பில்லியனாக உயர்ந்தது. இது ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் 51.0 சதவீதம் ஆகும். இவ்வடைவுக்கான காரணங்கள், இறக்குமதிகளின் அதிகரிப்பின் காரணமாக செஸ் வரி 9.3 சதவீதம் அதிகரித்தமை. - மோட்டார் வாகன இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் சற்று தளர்த்தப்பட்டமை மோட்டார் வாகனங்களுக்கான சொகுசு வரி வருமானம் ரூ.11.4 பில்லியனாக உயர்வடைந்தமை காரணமாகும் இது 2024 ம் ஆண்டின் அதே காலத்தில் ரூ.1.1 பில்லியன் மட்டுமே இருந்தது. எவ்வாறாயினும் தொலைத்தொடர்பு சேவைகளின் பயன்பாடு குறைந்தததைக் காட்டும் வகையில் ,தொலைத்தொடர்பு வரி 9.1 சதவீதம் குறைந்ததால் ,2025 ஜனவரி முதல் ஜான் வரை காலப்பகுதியில் வரி வருமான செயல்திறன் குறைவடைந்துள்ளது.
வரியற்ற வருமானம்	151.3	370.0	169.6	வரி அற்ற வருமானங்களில் இருந்து கிடைத்த வருமானம் 2025ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 12.1 சதவீதத்தால் அதிகரித்தது. இது முக்கியமாக வட்டி வருமானங்கள் ,அபராதங்கள், கட்டணங்கள் மற்றும் சேவைக்கட்டணங்கள் மூலம் கிடைத்த வருமானத்தினாலாகும்.இது 2025ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் 45.8 சதவீதம் ஆகும். எவ்வாறாயினும் வாடகை வருமானம் மற்றும் அரசுடமைத் தொழில் முயற்சிகளின் இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் (SOEs) மற்றும் குறைவாக இருந்ததால், ஆண்டு மதிப்பீட்டில் இருந்து விலகியுள்ளது.
மொத்தம்	**1,860.6**	**4,960.0**	**2,321.7**	

அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தால் தொகுக்கப்பட்டது.
(அ) தற்காலிகமானது.

கட்டம் 2.1 பிரதான அரசிறை நடவடிக்கைகள் (ஜனவரி - யூன் 2025)

நடைமுறைக்கு வரும் திகதி	நடவடிக்கைகள்
வருமான வரி - 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான திருத்தங்கள்	
01.04.2025	2025 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

1. தனிநபர் வருமான வரி (PIT) வீத அமைப்பு

தனிநபருக்கான தனிநபர் வருமான வரிச் சலுகையை ஆண்டொன்றுக்கு ரூபா 1,800,000/- வரை அதிகரித்தல் மற்றும் தனியாள் ஒருவரது வரி விதிக்கத்தக்க வருமானம் மீது ஏற்புடைய வரி வீதங்களை பின்வருமாறு திருத்தம் செய்தல்.

ரூ.மில்லியன்

	ஆண்டு வரி விதிக்கத்தக்க வருமானம்	
விளிம்பு வரி விகிதம் (%)	முந்தைய விதிப்பு முறை	தற்போதைய விதிப்பு முறை
0	1.2 வரை	1.8 வரை
6	1.2 – 1.7	1.8 - 2.8
12	1.7 – 2.2	-
18	2.2 – 2.7	2.8 - 3.3
24	2.7 - 3.2	3.3 - 3.8
30	3.2 - 3.7	3.8 - 4.3
36	3.7 மேல்	4.3 மேல்

2. நிறுவன வருமான வரி (CIT) வீதங்களின் திருத்தம்

(i) ஏதேனும் மதுபானம் அல்லது புகையிலை உற்பத்தியின் ஏற்றுமதி தவிர்ந்த வேறேதேனும் மதுபானம் அல்லது புகையிலை உற்பத்தி, விற்பனை அல்லது இறக்குமதி மற்றும் விற்பனை என்பவற்றிலிருந்து பெறப்படும் இலாபங்கள் மீதும் பந்தயம் பிடித்தலும் சூதாட்டமும் நடத்துவதிலிருந்தான இலாபங்கள் மீதும் ஏற்புடைய வருமான வரி வீதத்தினை 40 சதவீதத்திலிருந்து 45 சதவீதமாக அதிகரித்தல்

(ii) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் சேவையாற்றும் ஏதேனும் சேவையிலிருந்து பெறப்படும் அல்லது பெறப்பட்ட இலாபங்கள் தொடர்பில் ஏற்புடைய வருமான வரி வீதத்தை வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்டு வங்கியொன்றின் ஊடாக இலங்கைக்கு அனுப்பப்படுகின்ற, இலங்கைக்கு வெளியில் பயன்படுத்தப்படக்கூடிய எந்தவொரு ஆளுக்கும் ஏற்புடைய வருமான வரி வீதத்தை விதித்தல்.

(iii) ஏதேனும் வெளிநாட்டு முலங்களிலிருந்து ஈட்டப்பட்ட அல்லது பெற்றுக் கொள்ளப்பட்ட இலாபங்கள் மீதும் , வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்டு ஒரு வங்கியினூடாக இலங்கைக்கு அனுப்பப்படுமிடத்து அத்தகைய இலாபங்கள் தொடர்பில் ஏற்புடைய 15 சதவீத வருமான வரி வீதங்களை விதித்தல்.

3. முற்கூட்டிய வருமான வரி வீதம் (பிடித்து வைத்தல் வரி வீதம்)

வட்டி அல்லது கழிவு மீதான ஏற்புடைய முற்பண வருமான வரி வீதத்தை 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக அதிகரித்தல்

முத்திரைத் தீர்வை- 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்	
01.04.2025	2025.03.27 ஆம் திகதிய 2429/39 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்

- ஏதேனும் சொத்தின் குத்தகை அல்லது வாடகை தொடர்பான ஏதேனும் சாதனத்தின் மீது பொருந்தக்கூடிய முத்திரைத் தீர்வையை, குத்தகை அல்லது வாடகை ஒப்பந்தத்தில் (வாடகைக் கொள்முதல் ஒப்பந்தங்களைத் தவிர்த்து) குறிப்பிடப்பட்டுள்ள முழு காலத்திற்கு செலுத்த வேண்டிய மொத்த குத்தகை அல்லது வாடகை தொகை, அதில் எந்தவொரு முன்பணமும் உட்பட, ஒவ்வொரு ரூ.1,000 அல்லது அதன் ஒரு பகுதிக்காக ரூ.10 இலிருந்து ரூ.20 ஆக உயர்த்தல்.

கட்டம் 2.1 பிரதான அரசிறை நடவடிக்கைகள் (ஜனவரி - யூன் 2025) (தொடர்ச்சி)

நடைமுறைக்கு வரும் திகதி	நடவடிக்கைகள்
பெறுமதி சேர் வரி (VAT) – 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம்	
	2025 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி(திருத்த) சட்டம்
01.01.2024	1) 2023 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரி (பெசேவ) (திருத்த) சட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட பெசேவ சீர்திருத்தங்களை சீராக நடைமுறைப்படுத்துவதற்கும் தெளிவினைப் பேணுவதற்கும் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்திலிருந்து விலக்களிப்புகளை அகற்றுவதன் எதிர்பாராத விளைவுகளைத் தவிர்ப்பதற்கு.
11.04.2025	2) வர்த்தக நோக்கங்களுக்காக ஏற்றுமதி/ இறக்குமதி மேற்கொள்ளும் போது பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட பொருட்கள் அல்லது இறக்குமதியாளர்/ ஏற்றுமதியாளர் பெறுமதி சேர் வரி பதிவு செய்தல் போன்ற விடயங்களை கவனத்தில் கொள்ளாது நிரந்தர பெசேவ பதிவுச் சான்றிதழை வழங்குதல்
11.04.2025	3) பெசேவ வரிவிலக்களிக்கப்பட்ட வழங்கல்கள் / கொள்வனவுகள் தொடர்பிலும் பெசேவ விபரத்திரட்டைப் பதிவுசெய்யுமாறு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அறிவுரை வழங்குதல்.
11.04.2025	4) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் திரவ பால் மற்றும் தயிர் வழங்கலுக்கு பெசே வரியிலிருந்து விலக்கு அளித்தல்.
01.10.2025 திகதி முதல்	5) 2025 ஒக்டோபர் 01 ஆம் திகதியிலிருந்து இலத்திரனியல் தளத்தினூடாக வதிவற்றோரினால் வழங்கப்படும் சேவைகளுக்கு பெறுமதி சேர் வரியை விதித்தல்.
01.10.2025 திகதி முதல்	6) 2025 ஒக்டோபர் 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இலகுபடுத்தப்பட்ட பெசேவ முறைமையினை நீக்குதல் மற்றும் மீளளிப்பு செயன்முறையை துரிதப்படுத்துவதற்காக இடர்நேர்வு அடிப்படையிலான மீளளிப்பு பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துதல்.
உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) - 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்	
11.01.2025	2025.01.10 ஆம் திகதி 2418/43 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - வருடாந்திர பணவீக்க சீராக்கல் குறியீட்டின் அடிப்படையில் அலகு விகித உற்பத்தித் தீர்வை கொண்ட அனைத்துப் பொருட்களுக்கான உற்பத்தித் தீர்வையையும் 5.9 சதவீதம் உயர்த்துவதற்காக.
01.02.2025	2025.01.31 ஆம் திகதி 2421/42 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - மின்சார வாகனங்கள் மீதான உற்பத்தித் தீர்வையை 100 சதவீதம் அதிகரிப்பதற்காக
29.04.2025	2025.04.28 ஆம் திகதிய 2434/04 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல - வெளிப்புற மின்சார மூலத்தை செருகுவதன் மூலம் சார்ஜ் செய்ய முடியாத, மின்சார திரட்டியை சார்ஜ் செய்வதற்கு மட்டுமே பயன்படுத்தப்படும் (பெற்றோல், டீசல் அல்லது அரை டீசல்) மின்சார மோட்டார் வாகனங்களுக்காக புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய உப அலகுகளுக்கான உற்பத்தி வரியை விதித்தல்.
மதுவரி (கட்டளைச் சட்டம்) – மதுவரிக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 52)	
11.01.2025	மதுவரி அறிவித்தல் இல.01/2025 (2025.01.10 ஆம் திகதி 2418/42 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - வருடாந்த பணவீக்க சீராக்கல் சுட்டெண்ணின் அடிப்படையில் மதுபானங்களுக்கான மதுவரி வரியை 5.9 சதவீதத்தால் அதிகரிப்பதற்காக.
புகையிலை வரி - 1999 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டம்	
02.04.2025	2025.04.01 ஆம் திகதிய 2430/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல - புகையிலைக்கு அறவிடப்படும் புகையிலை வரியை ஒரு புகையிலை குச்சிக்கு ரூ.2 லிருந்து ரூ.3 ஆக உயர்தல்
சுங்க இறக்குமதி தீர்வை (CID) – 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வருமானப் பாதுகாப்புச் சட்டம்	
28.01.2025	வருமானப் பாதுகாப்பு கட்டளை இலக்கம் 01/2025 (2025.01.27 ஆம் திகதிய 2421/05 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீது 20 சதவீதம் அல்லது 20 சதவீத சுங்க இறக்குமதி வரியை குறிப்பிட்ட தீர்வை வீதத்துடன் (கலப்பு வரி வீதம்) விதிப்பதற்கு

கட்டம் 2.1 **பிரதான அரசிறை நடவடிக்கைகள் (ஜனவரி - யூன் 2025) (தொடர்ச்சி)**

நடைமுறைக்கு வரும் திகதி	நடவடிக்கைகள்
29.04.2025	வருமானப் பாதுகாப்பு கட்டளை இலக்கம் 02/2025 (2025.04.28 ஆம் திகதிய 2434/02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) - வெளிப்புற மின்சார மூலத்தை செருகுவதன் மூலம் சார்ஜ் செய்ய முடியாத, இயந்திரம் மின்சார திரட்டியை சார்ஜ் செய்ய மட்டுமே பயன்படுத்தப்படும் (பெற்றோல், டீசல் அல்லது அரை டீசல்) மின்சார மோட்டார் வாகனங்களுக்காக புதிய தேசிய உப பிரிவுகளை உருவாக்குவதற்காக
சுங்க மேலதிக கட்டணம் - சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235)	
01.02.2025	2025.01.31 ஆம் திகதிய 2421/43 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்களின் இறக்குமதி வரிகள் மீது மிகை விதிப்பொன்றை விதிப்பதற்காக.
29.04.2025	2025.04.28 ஆம் திகதிய 2434/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - வெளிப்புற மின்சார மூலத்தை செருகுவதன் மூலம் சார்ஜ் செய்ய முடியாத, இயந்திரம் மின்சார திரட்டியை சார்ஜ் செய்ய மட்டுமே பயன்படுத்தப்படும் (பெற்றோல், டீசல் அல்லது அரை டீசல்) மின்சார மோட்டார் வாகனங்களுக்காக புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய உப பிரிவுகள் மீது 50 சதவீத கூடுதல் கட்டணம் விதிப்பதற்கு
விசேட வியாபார பண்ட அறவீடு (SCL) – 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்	
01.01.2025	2024.12.31 ஆம் திகதிய 2417/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உட்பட 63 பொருட்களின் இறக்குமதிக்கு நடைமுறையில் உள்ள வரியின் செல்லுபடியாகும் காலத்தை 2025 டிசம்பர் 31 வரை நீட்டித்தல்.
28.01.2025	2025.01.27 ஆம் திகதிய 2421/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல - ரமழான் பண்டிகை காலத்தை கருத்திற்கொண்டு இறக்குமதி செய்யப்படும் பேரீச்சம் பழங்களுக்காக ஒரு கிலோவுக்கு ரூபா 199/- தீர்வை விலக்கு அளித்தல்.
இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் – 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம்	
28.01.2025	2025 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2025.01.27 ஆம் திகதிய 2421/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) - வர்த்தக அல்லது சரக்கு போக்குவரத்து வாகனங்களின் இறக்குமதி மீதான தற்காலிக இடைநிறுத்தத்தை நீக்குவதற்காக.*
01.02.2025	2025 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2025.01.31 ஆம் திகதிய 2421/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) - சொந்த பாவனை மோட்டார் வாகனங்கள் (கார்கள், வேன்கள், விளையாட்டு பயன்பாட்டு வாகனங்கள் போன்றவை) உட்பட மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீதான தற்காலிக இடைநிறுத்தத்தினை நீக்குவதற்கும் ஆகக்கூடிய வயது வரம்பை மீறும் மோட்டார் வாகனங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தை விதிப்பதற்கும்
19.03.2025	2025 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2025.03.19 ஆம் திகதிய 2428/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) - பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான ஏற்றுமதி பரிசோதனை சான்றிதழ்களை வழங்குவதற்கு அனைத்து நாடுகளுக்குமான அதிகாரமளிக்கப்பட்ட பரிசோதகராக வெரிடாஸ் பணியகத்தை நியமித்தல் மற்றும் ஏற்றுமதி நாட்டில் வங்கியின் முத்திரை இல்லாமல் பெறப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான ஏற்றுமதி பரிசோதனை சான்றிதழ்களை வழங்குவதற்கு நிகழ்நிலை சரிபார்ப்பு மூலம் உரிம வங்கிகளுக்கு அதிகாரமளித்தல் (2013 ஏப்ரல் 03 ஆம் திகதிய 1804/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 5 ஆம் இலக்க ஒழுங்குவிதியால் தேவைப்படுத்தப்படுகிறது).

கட்டம் 2.1 பிரதான அரசிறை நடவடிக்கைகள் (ஜனவரி - யூன் 2025) (தொடர்ச்சி)

நடைமுறைக்கு வரும் திகதி	நடவடிக்கைகள்
29.04.2025	2025 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2025.04.29 ஆம் திகதிய 2434/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) - 2023.01.01 ஆந் திகதிய 2312/77 ஆம் இலக்க விசேட வர்த்தமானியின் பிரகாரம் இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமம் வழங்கப்படுவது இடைநிறுத்தப்பட்டுள்ள பொருட்களின் பட்டியலை மீளாய்வு செய்தல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பொருட்களை பட்டியலிலிருந்து நீக்குதல் மற்றும் எந்தவொரு நாட்டிலும் பதிவு செய்யப்படாத மின்சார மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்வதற்கான இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் தேவையை நீக்குதல் (புத்தம் புதியது).
05.05.2025	2025 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2025.05.05 ஆம் திகதிய 2435/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக்கு பொருந்தக்கூடிய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குமுறைகளில், 28 ஏப்ரல் 2025 தேதியிட்ட அதி விசேட வர்த்தமானி இலக்கம் 2434/02 மூலம் மின்சார மோட்டார் வாகனங்களுக்காக வெளியிடப்பட்ட இயைபு முறைக் குறியீடுகளின் தேசிய உட்பிரிவுகளை இணைத்தல்.
19.05.2025	2025 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2025.05.19 ஆம் திகதிய 2437/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) ஜூன் 10, 2025 வரை, 2501.00 என்ற HS குறியீட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்ட மூல அயோடின் சேர்க்கப்படாத உப்பு மற்றும் உண்ணக்கூடிய அயோடின் சேர்க்கப்பட்ட உப்பு (தூள் மற்றும் சிறுமணி உப்பு) இறக்குமதி செய்வதற்கான இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் (ICL) தேவையை நீக்க.
புறப்படுகை அறவீடு- 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டம்	
31.01.2025	2025.01.31 ஆம் திகதிய 2421/30 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திலிருந்து சர்வதேச விமான சேவையின் ஊடாக 2025.12.25 முதல் இலங்கையை விட்டு வெளியேறும் நபர்களுக்கான வரி விலக்குக் காலத்தை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்கு நீடித்தல். - இராத்மாலானை யாழ்ப்பாணம் விமான நிலையங்களிலருந்து மற்றும் விமான சேவையை ஆரம்பிக்கும் விமானங்களின் மூலம் இலங்கையை விட்டு வெளியேறும் நபருக்கு விதிக்கப்படும புறப்படுகை அறவீட்டிற்காக 30 அமெரிக்க டொலரை சலுகை வீதமாக ஒரு வருட காலத்திற்கு நீடிப்பதற்கு
தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்கள் அறவீடு- 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்	
01.04.2025	2025.04.01 ஆம் திகதிய 2430/14 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் உள்வரும் சர்வதேச அழைப்புகள், குறிப்பிட்ட தொலைபேசி எண்கள், உள்வரும் உள்ளூர் அணுகல் கட்டணம், தொலைத்தொடர்பு மேம்பாட்டு கட்டணம் மற்றும் வெளிச்செல்லும் உள்ளூர் அணுகல் கட்டணம் மீதான செலுத்த வேண்டிய விதிப்பின் வீதத்தை 2025 ஜனவரி 01 முதல் 2027 டிசம்பர் 31 வரை மூன்று ஆண்டுகளுக்கு நீட்டித்தல்.
மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி – 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டம்	
01.02.2025	2025.01.31 ஆம் திகதிய 2421/41 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - மின்சார வாகனம் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு எரிபொருள் வகைக்குமான மோட்டார் வாகனங்களுக்கான சொகுசு வரி வரம்பினை 1.5 மில்லியன் ரூபாவால் திருத்தியமைப்பதற்கு
29.04.2025	2025.04.28 ஆம் திகதிய 2434/05 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - வெளிப்புற மின்சார மூலத்தை செருகுவதன் மூலம் சார்ஜ் செய்ய முடியாத, இயந்திரம் மின்சார திரட்டியை சார்ஜ் செய்ய மட்டுமே பயன்படுத்தப்படும் (பெற்றோல், டீசல் அல்லது அரை டீசல்) மின்சார மோட்டார் வாகனங்களுக்காக புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய உப பிரிவுகள் மீது மோட்டார் வாகனங்களின் மீதான சொகுசு வரியை விதிப்பதற்கு

** - இந்த வர்த்தமானி தற்போது நடைமுறையில் இல்லை.*

2.3 அரசாங்க செலவினம்

2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது ரூபா 2,463.3 பில்லியனாக இருந்த மொத்த அரசாங்கச் செலவினம், 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 10.9 சதவீதமாக அதிகரித்து ரூபா 2,730.7 பில்லியனாக இருந்தது. 2024 இன் இதே காலப்பகுதியில் ரூபா 2,218.4 பில்லியனாகக் காணப்பட்ட மீண்டெழும் செலவினம் 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 13.0 சதவிகிதத்தினால் ரூபா 2,506.8 பில்லியனாக அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 244.9 பில்லியனாக இருந்த மூலதனச் செலவினம் மற்றும் நிகரக் கடன் 2025 முதல் ஆறு மாதங்களில் ரூபா 223.9 பில்லியனாக 8.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

அட்டவணை 2.9 அரசாங்க செலவீனங்களின் செயலாற்றுகை (2025 ஜனவரி - யூன்)

ரூபா மில்லியன்

விடயம்	ஜனவரி - யூன்	
	2024	2025(அ)
மீண்டெழும் செலவினம்	**2,218,442**	**2,506,828**
சம்பளம்	480,326	555,136
ஓய்வூதியம்	188,086	208,371
வட்டிக் கொடுப்பனவு	1,142,105	1,264,591
ஏனையவை	407,925	478,730
மூலதன செலவினம் மற்றும் தேறிய கடன்	**244,863**	**223,879**
மொத்தம்	**2,463,305**	**2,730,707**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

வட்டிக் கொடுப்பனவுகள்

2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் உள்ள ரூபா 1,142.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன்கள் உட்பட வட்டி செலுத்துதலுக்கான மொத்தச் செலவு 10.7 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 1,264.6 பில்லியனாக அதிகரித்துள்ளது. இதற்குக் காரணம், உள்நாட்டு கடனுக்கான வட்டிக் கொடுப்பனவுகள் ரூபா 1,073.7 பில்லியனிலிருந்து, 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 4.1 சதவீதத்தினால் ரூபா 1,117.5 பில்லியனாகவும், வெளிநாட்டுக் கடனுக்கான வட்டி செலுத்துதல் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது ரூபா 68.4 பில்லியனிலிருந்து 115.2 சதவீதம் அதிகரித்து ரூபா 147.1 பில்லியனாகவும் அதிகரித்தமையாகும்.

சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள்

மாகாண சபைகள் உட்பட அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஊதியத்திற்கான செலவு 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 480.3 பில்லியனாக இருந்து, 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 15.6 சதவீதத்தால் ரூபா 555.1 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்புக்கு முக்கிய காரணம், பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 10/2025 இன் படி, அரசாங்க ஊழியர்களின் அடிப்படை சம்பளம் அதிகரித்ததே ஆகும்.

இதற்கிடையில், ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக, 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூபா 188.1 பில்லியனாக இருந்த ஓய்வூதியச் செலவு, 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 10.8 சதவீதம் அதிகரித்து ரூபா 208.4 பில்லியனாக அதிகரித்துள்ளது.

நலன்புரிச் செலவுகள்

2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், அஸ்வசும வீட்டு காசு மானியம், முதியோருக்கான உதவித்தொகை, சிறுநீரக நோயாளிகளுக்கான நிதி உதவி, மாற்றுத்திறனாளி குறைந்த வருமானம் ஈட்டும் நபர்களுக்கான உதவித்தொகை, மாற்றுத்திறனாளி வீரர்களுக்கான உதவி, கர்ப்பிணித் தாய்மார்களுக்கான உணவுப் பொதிகள் (போஷண மல்ல), பாடசாலைப் பாடப் புத்தகங்கள், பாடசாலை சீருடைகள் மற்றும் உர மானியம் உள்ளிட்ட அபிவிருத்தி உதவிகள் உள்ளிட்ட சமூக நலன் மற்றும் சமூகப் பாதுகாப்பிற்காக அரசாங்கம் ரூபா 461.9 பில்லியன் செலவிட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட அஸ்வசும காசு மானியங்களுக்கான சமூகப் பாதுகாப்புச் செலவுகள் ரூபா 75.3 பில்லியனாகும். 2025 ஆம் ஆண்டிற்கான அஸ்வெசும மற்றும் பிற வகைப்பட்ட வீட்டு பண மானியங்களுக்கான செலவினங்களுக்காக ரூபா 232.5 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் அரசாங்க மருத்துவமனைகளுக்கான மருத்துவப் பொருட்கள் உட்பட சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து திட்டங்கள் மீதான அரசாங்க செலவினம் ரூபா 44.7 பில்லியனாகும். 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் மாணவர்களுக்கான இலவச பாடப்புத்தகங்கள், சீருடைகள் மற்றும் காலணிகள் போன்ற கல்விக்கான நலன்புரி திட்டங்களுக்காக ரூபா 4 பில்லியன் செலவானது. இரசாயன உரத்துக்கான அரசாங்கத்தின் மானியத்திற்கான செலவீனமானது வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் ரூபா 21.9 பில்லியன் ரூபாவாகும் என கவனத்திற் கொள்வது முக்கியமானதாகும்.

அட்டவணை 2.10 பிரதான நலன்புரிச் செலவீனம் (2025 ஜனவரி - யூன்)

ரூபா.மில்லியன்

நிகழ்ச்சித்திட்டம்	2024[அ]	2025[அ]
சமூக நலன்புரி		
அரசாங்க வைத்தியசாலைகளுக்கான மருத்துவ வழங்கல்கள் (ஆயுர்வேத உள்ளடங்களாக)	28,961	44,740
பாடசாலை மாணவர்களுக்கான சுகாதாரக் காப்பீடு (சுரக்ஷா)	–	444
ஓய்வூதியர்களுக்கான அக்ரஹார காப்புறுதித் திட்டம்	460	486
முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு	111	334
"ரணவிரு மாபிய ரக்கவரண" கொடுப்பனவு	1,084	699
அரச ஊழியர்களுக்கான சொத்துக் கடன் வட்டி	855	725
இ.போ.ச வருமானமீட்டாத பாதைகளுக்கான மானியம் மற்றும் படைவீரர்களுக்கு பருவச்சீட்டு மற்றும் பேரூந்து அனுமதிப்பத்திரங்கள்	1,529	1,985
"சுவசரிய" – 1990 இலவச அம்பியுலன்ஸ் சேவை	591	1,162
மூத்த குடிமக்கள் வங்கிக் கணக்குகளில் வட்டி வேறுபாடு	20,000	10,000
உலக உணவுத் திட்டம்	485	110
ஏனையவை	1,566	906
சமூகப் பாதுகாப்பு		
குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கான உதவித்தொகை	64,079	75,329
குறை வருமான அங்கவீனமுற்றவர்களுக்கான ஒத்துழைப்பு	2,514	6,828
வயோதிபர்களுக்கான நிதி ஒத்துழைப்பு	5,527	21,086
சிறுநீரக நோயாளர்களுக்கான நிதி ஒத்துழைப்பு	1,183	2,296
பாடசாலை எழுதுபொருட்கள் வாங்குவதற்கான நிதியுதவி	-	2,815
ஓய்வூதியம்	188,086	208,371
இறந்த மற்றும் காயமடைந்த வீரர்களுக்கான இழப்பீடு	23,338	24,806
விவசாயிகளுக்கான ஓய்வூதியம்	2,434	2,630
ஏனையவை	96	152
சுகாதார மற்றும் போசாக்கு		
திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம்	978	1,126
கர்ப்பிணி தாய்மார்களுக்கான போசாக்குணவு பொதி	2,790	3,058
பாடசாலை போசாக்குணவு நிகழ்ச்சித்திட்டம்	6,349	12,215
முன்பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு	344	767
ஏனையவை	336	144
கல்வி		
பாடசாலை பாடப்புத்தகங்கள்	3,364	1,530
பாடசாலை சீருடைகள்	1,034	54
கஷ்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கான பாதணிகள்	200	2,474
புலமைப்பரிசில் - தரம் 5 மாணவர்கள்	418	253
மஹாபொல மற்றும் மாணவர் உதவு தொகைகள்	1,250	2,405
அரச பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற முடியாத மாணவர்களுக்கான கடன் திட்டம்	812	758
பாடசாலை மற்றும் உயர்கல்வி பருவச்சீட்டு	4,725	5,900
ஏனையவை	134	406
அபிவிருத்தி உதவி		
உரம் மற்றும் பயிர் மானியம்	20,398	21,997
ஏனையவை	337	3,004
மொத்தம்	**386,367**	**461,995**

மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

[அ] தற்காலிகமானது

துறைரீதியான செலவினங்கள்

பாடசாலைக் கல்வி

2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களின் போது, பாடசாலைக் கல்விக்காக ரூபா 189.2 பில்லியன் செலவிடப்பட்டதுடன், இதில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவு முறையே ரூபா 184.6 பில்லியன் மற்றும் ரூபா 4.6 பில்லியன் ஆகும்.

பாடசாலை ஊட்டச்சத்து உணவுத் நிகழ்ச்சித்திட்டம், பாடசாலை பாடப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை சீருடைகள் வழங்குதல் மற்றும் கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களுக்கு பாதணிகள் வழங்குதல், மாணவிகளுக்கான சுகாதார துவாய்கள், அத்துடன் மாணவர்களுக்கான சுகாதார காப்புறுதித் திட்டம் (சுரக்ஷா) போன்ற நலத் திட்டங்களுக்காக ரூபா 16.9 பில்லியனினை செலவளித்து முதலீடு செய்வதனை அரசு தொடர்ந்துள்ளது. எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், இந்த நலத்திட்டங்களுக்கான செலவினம் 48.7 சதவீதம் அதிகரித்துள்ளது.

மேலும், 2025 ஆம் ஆண்டு முதல் விளையாட்டுப் பாடசாலை மாணவர்களுக்கான தரம் 5 உதவித்தொகை கொடுப்பனவை ரூபா 1,500 ஆகவும், சத்தான உணவு கொடுப்பனவை ரூபா 10,000 ஆகவும் அரசாங்கம் உயர்த்தியுள்ளது.

தேசியப் பாடசாலைகள் மற்றும் மாகாணப் பாடசாலைகளில் மறுவாழ்வு மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ரூபா 4.6 பில்லியன் மூலதனச் செலவு முக்கியமாக செலவிடப்பட்டது.

அட்டவணை 2.11 பாடசாலைக் கல்வி தொடர்பான பிரதான செயற்பாட்டுச் செலவினம் : (2025 ஜனவரி - யூன்)

ரூபா.மில்லியன்

விபரம்	ஜனவரி – யூன்	
	2024	2025(அ)
மீண்டெழும் செலவினம்		
பாடசாலை ஆசிரியர்கள், ஏனைய பதவியினருக்கான வேதனாதிகள்	135,839	165,975
தேசிய	29,372	33,356
மாகாண	106,467	132,619
நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்	11,414	16,971
பரீட்சை மதிப்பீடு	2,361	3,314
மூலதனச் செலவினம்		
பாடசாலைகள் புனரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி	290	362
ஆசிரிய அபிவிருத்தி	29	94
கல்வியில் விசேட அபிவிருத்தி சீர்திருத்தம்	512	52
தொழில்நுட்ப பிரிவிற்கான தேசிய கல்வியியல் கல்லூரி நிறுவப்பட்டமை	517	559
மாகாணக் கல்வி	820	2,873

மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

உயர் கல்வி

2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் பல்கலைக்கழகக் கல்விக்கான செலவு 20.3 சதவீதத்தால் ரூபா 45.6 பில்லியனுக்கு அதிகரித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மீண்டெழும் செலவினம் 26.9 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 37.2 பில்லியனாக இருந்தது. 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மூலதனச் செலவினம் 2.4 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 8.4 பில்லியனாகக் காணப்பட்டது.

அரசாங்கம் பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல உதவித்தொகையை ரூபா 5,000 இலிருந்து ரூபா 7,500 ஆகவும், மாணவர் உதவித்தொகையை ரூபா 4,000 லிருந்து ரூபா 6,500 ஆகவும் உயர்த்தி, 2024 உடன் ஒப்பிடும்போது மேலதிகமாக ரூபா 2.0 பில்லியனை ஒதுக்கியதுடன் 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் ரூபா 2.4 பில்லியனைச் செலவு செய்தது.

அட்டவணை 2.12 உயர் கல்வியின் பிரதான செயற்பாடுகளுக்கான செலவினம் : (2025 ஜனவரி - யூன்)

ரூபா.மில்லியன்

விபரம்	ஜனவரி – யூன்	
	2024	2025(அ)
மீண்டெழும் செலவினம்	24,050	29,928
பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களின் ஆள்சார் வேதனாதிகள்		
மஹாபொல மற்றும் மாணவர் உதவு தொகைக் கொடுப்பனவு	1,250	2,405
மூலதனச் செலவினம்		
உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி கருத்திட்டத்தினைத் துரிதப்படுத்தல் (உலக வங்கி)	1,526	3,089
விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப, மனிதவள அபிவிருத்தி கருத்திட்டம் (இ.அ/ஆசிய அபிவிருத்தி வங்கி)	3,108	4,126
சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை ஸ்தாபித்தல்- இரண்டாம் கட்டம் (இ.அ/சவுதி)	472	222
வயம்ப பல்பலைக்கழக நகர அபிவிருத்தித் திட்டம் (இ.அ/சவுதி)	163	133
ஏனைய அபிவிருத்தி கருத்திட்டங்கள்	850	174

மூலம் : தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற் கல்வி

2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்விக்காக செலவிடப்பட்ட மொத்த செலவினம் ரூபா 4,758 மில்லியனாக இருந்தது. இதில் ரூபா 4,334 மில்லியன் மற்றும் ரூபா 424 மில்லியன் முறையே மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக செலவிடப்பட்டது.

தொழிற்கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு "நிபுணதா சிசு திரிய" ரூபா 4,000 இலிருந்து ரூபா 5,000 ஆக உயர்த்தப்பட்டது, 2024 உடன் ஒப்பிடும்போது கூடுதலாக ரூபா 200 மில்லியன் ஒதுக்கப்பட்டது, மேலும் 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் ரூபா 317 மில்லியன் செலவினம் ஏற்பட்டது.

அட்டவணை 2.13 திறன் அபிவிருத்தி சார்ந்த பிரதான செயற்பாடுகள் மீதான செலவினம் : 2025 சனவரி - யூன்

ரூபா.மில்லியன்

விபரம்	ஜன - யூன்	
	2024	2025(அ)
திறன் மேம்பாடு மற்றும் தொழிற்கல்வி	2,721	2,810
தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி	1,112	1,258
இலங்கையில் தொழிற்கல்வி பயிற்சி (இ.அ/ ஜே. ஒத்துழைப்பு)	7	221
07 தொழில்நுட்ப மற்றும் பொறிமுறைத் தொழில்நுட்ப கல்லூரிகளின் நவீனமயமாக்கல்	83	54
சுயதொழில் ஊக்குவிப்பு முன்முயற்சி திட்டம்	70	34
தொழிற்கல்வி பயிற்சியை மேம்படுத்தல்	40	3
தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சியின் வளர்ச்சி	6	8
நிபுனதா சிசு திரிய	45	317
தொழிற்கல்வி மாணவர்களுக்கான பருவச்சீட்டு	70	53

மூலம் : தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்

2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பங்களுக்குச் செலவிடப்பட்ட மொத்தச் செலவு ரூபா 1,416 மில்லியனாக இருந்ததுடன், இதில் ரூபா 1,240 மில்லியன் மற்றும் ரூபா 176 மில்லியன் முறையே மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காகச் செலவிடப்பட்டது.

அட்டவணை 2.14 பிராதன விஞ்ஞானம் மற்றும் புத்தாக்க செயற்பாடுகளுக்கான செலவினம் (2025 ஜனவரி முதல் யூன்)

ரூபா.மில்லியன்

விபரம்	ஜன - யூன்	
	2024	2025(அ)
இருதரப்பு மற்றும் பல்தரப்பு கூட்டமைப்பின் கீழ் இணைந்த அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்	0.024	2.4
ஆராய்ச்சி திட்டங்குளுக்கான வசதி அளித்தல்	-	0.3

மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

சுகாதாரம்

2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களின் போது மேலேத்தேய மற்றும் சுதேச மருத்துவத் துறைகள் உட்பட மாகாண மற்றும் மத்திய அரசின் சுகாதாரச் செலவினங்களுக்கான மொத்த அரசாங்கச் செலவினம் 20.0 சதவீதத்தால் ரூபா 202.7 பில்லியனாக அதிகரித்துள்ளது. மொத்த சுகாதாரச் செலவினங்களில், மீண்டெழும் செலவு ரூபா 190.2 பில்லியனாகவும், மூலதன செலவு ரூபா 12.6 பில்லியனாகவும் இருந்தது. மீண்டெழும் செலவினத்தில் மருந்து பொருட்கள், சத்திரசிகிச்சைப் பொருட்கள் மற்றும் ஆய்வுகூடப் பொருட்கள் அடங்கலாக மருத்துவப் பொருட்கள் விநியோகம் சம்பந்தமாக, ரூபா 44.8 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

அட்டவணை 2.15 சுகாதாரத் துறையில் பிரதான செயற்பாடுகள் மீதான செலவினம் (2025 ஜன - யூன்)

ரூபா.மில்லியன்

விபரம்	ஜன - யூன்	
	2024	2025(அ)
மொத்த மீண்டெழும் செலவினம்	**158,091**	**190,152**
சேவை வழங்கல் செலவினம்	85,705	95,953
அதில் மருத்துவ பணியாளர் மற்றும் ஆதரவு ஊழியர்கள் சம்பளங்கள்	67,711	75,753
மருத்துவத்திற்கான வழங்கல்	28,961	44,793
மாகாண சுகாதாரம்	43,425	49,406
அரச முதலீட்டுச் செலவினம்	**10,569**	**12,620**
மருத்துவ உபகரணம்	577	2,326
சுகாதார முறைமை மேம்பாட்டுக் கருத்திட்டம் - ஆ.அ.வங்கி	1,254	903
இலங்கை கொவிட் 19 அவசர பொறுப்பு மற்றும் சுகாதார முறைமை தயார்நிலைக் கருத்திட்டம் (உ.வ)	844	-
நிரல் அமைச்சு வைத்தியசாலைகளின் கீழ் அவசர சிகிச்சைப் பிரிவை மேம்படுத்தல்	215	79
உயர் சக்தி கதிரியக்கத்துடன் இலங்கையில் புற்றுநோயாளர்களுக்கான உயர் தர கதிரியக்க சிகிச்சை ஏற்பாடு	-	495
தாதியர் பீடம்/ விடுதி நிர்மாணம்	83	83
எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை பிரிவு நிறுவுதல் - கண்டி போதனா வைத்தியசாலை	32	62
லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையில் இருதய மையக் கட்டுமானம்.	125	184
5 மாடி சத்திரசிகிச்சை பிரிவுகள் மற்றும் அறுவை சிகிச்சை அரங்கு வளாகம் நிர்மாணம்.மாவட்ட பொது வைத்தியசாலை மொனராகலை	-	71
மாகாண பொது வைத்தியசாலை பதுளையில் பத்து மாடிக் கட்டிடத்தின் கட்டுமானம்	-	98
ஏனைய மூலதன முதலீடு	4,644	8,006
மாகாண சுகாதார முதலீடு	2,795	396

மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

விவசாயம்

பெருந்தோட்டம், கால்நடைகள், மீன்பிடி மற்றும் காணி அபிவிருத்தி உள்ளிட்ட விவசாயத் துறைக்கான செலவினம் 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 53.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில்

11 சதவீதத்தினால் ரூபா 59.4 பில்லியனாக அதிகரித்துள்ளது. 2024/2025 பெரும் போகத்திலிருந்து ஒரு ஹெக்டேயருக்கு ரூபா 15,000 இலிருந்து ரூபா 25,000 ஆக உர மானியம் அதிகரித்ததே இதற்கான பிரதான காரணமாகும். 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மொத்த செலவினத் தொகையில், உர மானிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 21.99 பில்லியனும், பெருந்தோட்டத் துறை அபிவிருத்திக்காக ரூபா 1.47 பில்லியனும், மீன்பிடி அபிவிருத்திக்காக ரூபா 812 மில்லியனும், காணி அபிவிருத்திக்காக ரூபா 455 மில்லியனும் பயிர் விவசாயத்திற்காக ரூபா 190 மில்லியனும் செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை கால்நடை அபிவிருத்தி மற்றும் துறைக்கு தேவையான வசதிகளை வழங்கும் வகையில் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக செலவிடப்பட்டது.

நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாடு

2025 இன் முதல் ஆறு மாதங்களில், பாதுகாப்பான குடிநீர் மற்றும் தரமான துப்புரவு சேவைகளை அணுகுவதை உறுதி செய்வதற்காக அரசாங்கம் ரூபா 8,980 மில்லியனை செலவிட்டுள்ளது. இதற்கமைவாக, மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக முறையே ரூபா 299 மில்லியன் மற்றும் ரூபா 8,681 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. உற்பத்தி திறனை மேம்படுத்துதல், புதிய நீர் வழங்கல் திட்டங்களை நிறுவுதல் மற்றும் முழு மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதை உறுதிசெய்யும் கருத்திட்டப்பணிகளை விரைவுபடுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் திறன் மேம்பாடு மற்றும் விநியோக விரிவாக்க கருத்திட்டம் 2025 இல் செயல்படுத்தப்படுகிறது.

பாதைகளும் பாலங்களும்

2025 இன் முதல் ஆறு மாதங்களில், பாதைகள் மற்றும் பாலங்களுக்கான செலவினம் ரூபா 77,874 மில்லியனாக இருந்ததுடன், இது முன்னைய ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடுகையில் 18.0 சதவீத குறைவாகும்.

ஒரு நெருக்கமான ஆய்வில், அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்திக்கான செலவு ரூபா 20,608 மில்லியனில் இருந்து ரூபா 15,793 மில்லியனாகக் குறைந்துள்ளது என்பதைக் காட்டுகிறது. இதில், மத்திய அதிவேக நெடுஞ்சாலைக் கருத்திட்டம் தொடர்ந்து செலவினத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது, அதே நேரத்தில் கொழும்பு - இரத்னபுரி - பெல்மதுல்ல அதிவேக நெடுஞ்சாலை

அட்டவணை 2.16 பாதைகள் மற்றும் பாலங்கள் மீதான செலவினம் (2025 ஜன - யூன்)

ரூபா. மில்லியன்

	கருத்திட்டம் / நிகழ்ச்சித் திட்டம்	ஜனவரி - யூன் 2024(அ)	ஜனவரி - யூன் 2025(அ)
1	**அதிவேக நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி**	**20,608**	**15,793**
	மத்திய அதிவேக நெடுஞ்சாலை திட்டம்	14,427	14,577
	கொழும்பு - இரத்தினபுரி - பெல்மதுல்லா அதிவேக நெடுஞ்சாலை	1,787	523
	புதிய களனி பாலத்திலிருந்து அதுருகிரிய வரை உயர்த்தப்பட்ட அதிவேக நெடுஞ்சாலை	–	3
	துறைமுக அடைவு உயர்த்தப்பட்ட அதிவேக நெடுஞ்சாலை திட்டம்	3,894	690
	தெற்கு அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தின் விரிவாக்கம்	500	-
2	**நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி**	**25,551**	**25,054**
	பாதை பராமரிப்பு மற்றும் மேம்பாடு	7,192	11,000
	கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்தித் திட்டம்	792	777
	மேல் மாகாண தேசிய நெடுஞ்சாலைகள்	368	124
	ஒருங்கிணைந்த பாதை முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (I பாதை)	3,220	2,913
	A 17 வீதி வழித்தட திட்டத்தின் (ரக்வான - சூரியகந்த) புணரமைப்பு	394	378
	உள்ளடக்கிய இணைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்	2,652	3,830
	பிரதான பாதைகள் மற்றும் அதிவேகப்பாதைகளை அடைவுக்கான மற்றும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான மாற்று சாலை தொடர்பு அபிவிருத்தி	9,095	5,588
	ஏனைய நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி	1,838	444
3	**பாதைகள் விரிவுபடுத்தல் மற்றும் மேம்படுத்தல்**	**344**	**704**
4	**பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் நிர்மாணம்**	**1,257**	**3,174**
	தேசிய நெடுஞ்சாலைகளில் சேதமடைந்த மற்றும் பலவீனமான பாலங்களை புனரமைத்தல்	106	230
	பழைய பாலங்களின் தொகுதிகளைக் கொண்டு கிராமிய பாலங்கள் நிர்மாணம்	125	151
	கொஹுவல மற்றும் காதம்பே மேம்பாலங்களின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்	97	81
	உத்தரனாந்த மாவத்தையிலும், சிலேவாயில் ரயில் நிலையத்திற்கு அருகாமையிலும் ரயில் பாதைக்கு மேல் மேம்பாலங்கள் கட்டுதல்	829	2,576
	தேசிய அதிவேகப் பாதையிலுள்ள 25 பாலங்களை புணரமைத்தல்	100	136
5	**"மகநெகும" கிராமிய பாதை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**	**915**	**388**
6	**காணி மற்றும் காணி மேம்பாடு (முன்னுரிமை கருத்திட்டங்கள் நீங்கலாக ஏனைய கருத்திட்டங்கள்**	**3,128**	**3,255**
7	**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அர்ப்பணிப்புகளுக்கு இடைவெளி நிதியளிப்பு**	**43,145**	**29,526**
8	**ஏனையவை**	**–**	**-**
	மொத்தம்	**94,948**	**77,874**

மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

மற்றும் துறைமுக அணுகல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை போன்ற பிற அதிவேக நெடுஞ்சாலைத் திட்டங்கள் கணிசமாகக் குறைந்த செலவைப் பதிவு செய்துள்ளன.

ஒட்டுமொத்த வீதி அபிவிருத்தி முன்னேற்றத்தில் உள்ள நிலைத்தன்மை, உப நிகழ்ச்சித்திட்டங்களுக்குள் குறிப்பிடத்தக்க மறு ஒதுக்கீட்டை மறைக்கிறது. குறிப்பாக, வீதி பராமரிப்பு மற்றும் மேம்பாடு கூர்மையான அதிகரிப்பைக் கண்டது, இது ஏற்கனவே உள்ள சாலை வலையமைப்பைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதில் முன்னேற்றத்தை உறுதிப்படுத்துகிறது. உள்ளடக்கிய இணைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டமும் முந்தைய ஆண்டை விட அதிகரித்த முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது.

முன்னேற்றத்தின் மிக முக்கியமான பகுதிகளில் ஒன்று பாலங்கள் மற்றும் மேம்பாலங்கள் ஆகும், அங்கு செலவு இரு மடங்கிற்கும் அதிகமாக அதிகரித்துள்ளது. உத்தரானந்த மாவத்தை மற்றும் கொம்பனி வீதி ஆகிய இடங்களில் ரயில் பாதையில் மேம்பாலங்கள் கட்டப்பட்டதே இந்த அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகும். ஏனைய சிறிய பாலக் கருத்திட்டங்களும் சீராக முன்னேறி வருவதுடன், இது இந்தத் துணைத் துறையில் வலுவான முன்னேற்றத்தைக் குறிக்கிறது.

மேலும், மொத்த செலவினத்தின் மிகப்பெரிய விகிதத்தைக் குறிக்கும் ஏறக்குறைய ரூபா 29,526 மில்லியன், வீதி மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டுக் கருத்திட்டங்களைச் செயல்படுத்த உள்ளூர் வங்கிகளிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபை பெற்ற கடன்களுக்கான வட்டி மற்றும் மூலதனத் திருப்பிச் செலுத்துதலாக செலுத்தப்பட்டது.

போக்குவரத்து

போக்குவரத்துத் துறைக்கான மொத்த அரசாங்கச் செலவு 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 12.0 சதவீதம் குறைவடைந்து ரூபா 30.8 பில்லியனாக இருந்தது. இதில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக முறையே ரூபா 22.3 பில்லியன் மற்றும் ரூபா 8.5 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுடன் ஒப்பிடும்போது 2025 ஆம் ஆண்டில் கண்டியில் பல்வகை போக்குவரத்து முனையத்தை நிர்மாணிப்பதில் முன்னேற்றம் கணிசமாக அதிகரித்துள்ளது.

கொழும்பு புறநகர் புகையிரத பாதை கருத்திட்டம், மஹவ முதல் ஓமந்தை வரையிலான புகையிரத பாதையை புனரமைத்தல், தற்போதுள்ள புகையிரத பாதைகளை பராமரித்தல் மற்றும் சிறிய மற்றும் பாரிய அளவிலான திருத்தப்பணிகளுக்காக புகையிரத திணைக்களத்தினால் ரூபா 6.2 பில்லியன் செலவிடப்பட்டது. இந்தச் செலவினம், தற்போதுள்ள ரயில் பாதைகளின் பராமரிப்பு மற்றும் ரயில் வலையமைப்பில் சிறிய மற்றும் பெரிய பழுதுபார்ப்புகளையும் உள்ளடக்கியது.

2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், பேருந்து போக்குவரத்துக்கான மொத்தச் செலவு ரூபா 7 பில்லியனாகும். இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளை பொருளாதார ரீதியாக இலாபமில்லாத பாதைகளில் இயக்குதல், பாடசாலை மற்றும் உயர்கல்வி பருவச் சீட்டுகள் மற்றும் ஆயுதப் படைகளுக்கு பேருந்து அனுமதிப்பத்திரம் வழங்குதல் போன்ற நலன்புரி சேவைகளுக்காக செலவிடப்பட்டது. இந்த காலப்பகுதியில் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தைச் செயற்படுத்துவதற்கு 0.98 பில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது.

வீடமைப்பு அபிவிருத்தி

2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களின் போது, நகர்ப்புற மறுமலர்ச்சி வீட்டுவசதி நிகழ்ச்சித்திட்டம், மோதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான மீள்குடியேற்றம் / நிரந்தர வீடுகள், செமட்ட நிவஹன மற்றும் நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீட்டுவசதி அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட சீன உதவியின் கீழ் 2,000 வீட்டு அலகுகள் கட்டுமானம், இந்திய நிதியுதவியுடன் கூடிய 10,000 வீட்டுவசதி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தோட்டக்கலை மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட அரச வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளிட்ட வீட்டுவசதி மற்றும் தொடர்புடைய உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக ரூபா 5,506 மில்லியன் செலவிடப்பட்டது.

நகர அபிவிருத்தி

2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் நகர அபிவிருத்திக்கான மொத்தச் செலவு ரூபா 1,252 மில்லியனாகும். இதில் ரூபா 526 மில்லியன் மற்றும் ரூபா 726 மில்லியன் முறையே மீண்டெழும் செலவு மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக செலவிடப்பட்டது. கொழும்பு நகர அபிவிருத்தித் துறைக்கான மொத்த செலவினங்களில், கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம், நகர மறுசீரமைப்புத் திட்டம், மூலோபாய நகர அபிவிருத்தித் திட்டம் (அநுராதபுர) மற்றும் "சியாக் நகர" நிகழ்ச்சித் திட்டங்கள், வெராஸ் கங்கை வெள்ள நீர் வடிகால் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டு கருத்திட்டம் மற்றும் மெட்ரோ கொழும்பு திண்மக்கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம் என்பவற்றுக்காக செலவிடப்பட்டது.

சுற்றாடலீ

2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களின் போது, சுற்றுச்சூழல் துறைக்கான மொத்த அரசாங்க செலவினம் ரூபா 5.2 பில்லியனாக இருந்தது. இதில் முறையே ரூபா 4.8 பில்லியன் மற்றும் 401 மில்லியன் முறையே மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காகவும் மேற்கொள்ளப்பட்டது. சுற்றாடல் பாதுகாப்புக்காக ரூபா 68 மில்லியனும், வனப் பரப்பு மற்றும் வனப் பாதுகாப்பிற்காக ரூபா 175 மில்லியன் ரூபாவும், மின்சார வேலிகள் அமைத்தல் உட்பட மனித யானை மோதலைத் தணிக்க 158 மில்லியன் ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, கடற்கரை பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவத்தின் முக்கிய நடவடிக்கைகளை செயற்படுத்த ரூபா

23 மில்லியன் பயன்படுத்தப்பட்டதுடன், அதே நேரத்தில் ரூபா 38 மில்லியன் மற்றும் ரூபா 17 மில்லியன் முறையே விலங்கியல் பூங்காக்கள் மற்றும் தாவரவியல் பூங்காக்களின் அபிவிருத்திக்காக செலவிடப்பட்டது. மீதமுள்ள செலவு சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வனவிலங்குகள், வனம் மற்றும் கடலோர பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கொள்கைகளை செயல்படுத்துதல் மற்றும் விலங்கியல் மற்றும் தாவரவியல் பூங்காக்களின் அபிவிருத்தி தொடர்பான செயற்பாட்டு மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டது.

நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம்

2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவத்துக்கான செலவு ரூபா 13.8 பில்லியனாக இருந்தது. அந்த செலவில், ரூபா 9.0 பில்லியன் மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கு செலவிடப்பட்டது. மீதமுள்ள ரூபா 4.8 பில்லியன் நீர்ப்பாசன அமைச்சு மற்றும் திணைக்களத்தின் கீழுள்ள நீர்ப்பாசன முறைமைகளின் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டிற்காக செலவிடப்பட்டது.

2.4 பொது திறைசேரியின் காசுப்பாய்ச்சல் செயலாற்றுகை

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட வருமான அடிப்படையிலான நிதி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளின் பயனாக, 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் காசு உட்பாய்ச்சல்கள் அதிகரித்து, பொது திறைசேரி செயற்பாடுகளை இலகுவாக்கியது. மேம்படுத்தப்பட்ட வருமானம், சந்தையில் இருந்து முழுத் தேவையையும் உயர்த்துவதற்குப் பதிலாக கடன் சேவைக் கொடுப்பனவுகளுக்கு நிதியளிப்பதற்கு பொது திறைசேரி காசுப் பாய்ச்சலினை நியாயமான முறையில் இலகுபடுத்தியது. அரசாங்கத்தால் மேலும், வங்கித் துறையின் மேம்பட்ட திரவத்தன்மை நிலைமை மூலம் பணம் மற்றும் மூலதனச் சந்தைகளில் உள்ள திரவத்தன்மை மிகை சந்தை வட்டி விகிதங்களை பராமரிக்க துணைபுரிகிறது. குறிப்பாக, உள்நாட்டு வருமான திணைக்களம், இலங்கை சுங்கம் மற்றும் மதுவரித் திணைக்களம் போன்ற நிறுவனங்கள் தங்கள் முன்னரே நிர்ணயிக்கப்பட்ட வருமான இலக்குகளை விஞ்சி பாராட்டத்தக்க செயற்திறனை வெளிப்படுத்தியுள்ளதுடன், இதன் மூலம் நிதி ஒழுக்கம் மற்றும் மூலோபாய திட்டமிடலுக்கான வலுவான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றன. வருமான வசூலில் ஏற்பட்ட இந்த மேல்நோக்கிய நகர்வு, திரட்டப்பட்ட ரொக்க இருப்புகளில் கணிசமான பகுதியை கடன் சேவை கடமைகளுக்கு ஒதுக்க திறைசேரிக்கு அதிகாரம் அளித்துள்ளது. இதன் மூலம் வெளிநாட்டுக் கடன்களை நம்பியிருப்பதைக் குறைத்து, மிகவும் நிலையான நிதி சூழலை வளர்க்கிறது.

இருப்பினும், முதன்மையாக அரசாங்கத்தின் அமெரிக்க டொலர் வருமானத்தின் பற்றாக்குறை காரணமாக வெளிநாட்டுக் கடன் திருப்பிச் செலுத்துதல் தொடர்பான பிரச்சினை எழுந்தது. இதன் விளைவாக, இந்தக் கடமைகளை நிறைவேற்ற இலங்கை மத்திய வங்கியிடமிருந்து அமெரிக்க டொலர்களைப் பெறுவதன் மூலம் பணப்புழக்க இடையகம் பயன்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக, சர்வதேச நாணய நிதியத்தின் நான்காவது தவணையிலிருந்து ஏறக்குறைய ஐ.அ.டொ. 350 மில்லியன் பெறப்பட்டதுடன் ஐக்கிய அமெரிக்க டொலர் பணப்புழக்க அழுத்தங்களைக் குறைப்பதற்கு கணிசமாக பங்களித்ததன் மூலம் திறைசேரியின் பணப்புழக்கத்தைப் பராமரிப்பதற்கு ஒத்துழைப்பாக அமைந்தது. இந்த நிகழ்வுகளின் வரிசை, வெளிப்புறக் கடன் சேவை உறுதிப்பாடுகளைத் தக்கவைக்க வெளிநாட்டு நிதி ஆதரவின் மீதான முக்கியமான சார்புநிலையை எடுத்துக்காட்டுவதுடன் வரையறுக்கப்பட்ட அந்நியச் செலாவணி இருப்புக்களின் பின்னணியில் மூலோபாய பணப்புழக்க முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

அதே நேரத்தில், உள்நாட்டு பணம் மற்றும் மூலதன சந்தைகளுக்குள் புழக்கத்தில் உள்ள உபரி பணப்புழக்கம், வங்கித் துறையின் மேம்பட்ட பணப்புழக்க நிலையுடன் இணைந்து, நிலையான வட்டி விகிதங்களைப் பராமரிக்க பங்களித்துள்ளதுடன், இது தொடர்ச்சியான பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கிறது. 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், புதுமையான கொள்கை நடவடிக்கைகள் மற்றும் விடாமுயற்சியுடன் கூடிய நிர்வாக முயற்சிகளின் உறுதியான தாக்கத்தை விளக்கும் வகையில், கையில் வரலாற்று உயர்வான ரொக்கத் தாங்கல் காணப்பட்டது. மேலும், மேம்பட்ட வருமான வழிகள் மூலம் உருவாக்கப்படும் அதிகப்படியான பணம், சந்தை ஏற்ற இறக்கத்தைக் குறைப்பதற்கும் பணப்புழக்க போதுமான தன்மையை உறுதி செய்வதற்கும் மாற்று நிதி ஏற்பாடாகச் செயல்பட்டு, பொது வங்கி நிறுவனங்களுக்கு விவேகத்துடன் செலுத்தப்பட்டுள்ளது. இந்த மூலோபாய இருப்பு ஆண்டின் ஆரம்ப ஆறு மாதங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கட்டண உறுதிப்பாடுகளை பூர்த்தி செய்ய தீவிரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக, இந்த முன்னேற்றங்கள் நிதி முகாமைத்துவத்துக்கான ஒரு முன்னெச்சரிக்கை மற்றும் எதிர்கால அணுகுமுறையை எடுத்துக்காட்டுகின்றன. நிலையான அபிவிருத்தி, விவேகமான வள ஒதுக்கீடு மற்றும் பொருளாதார நிச்சயமற்ற தன்மைகளை எதிர்கொள்ளும் போது மீள்தன்மை ஆகியவற்றை வலியுறுத்துகின்றன.

அட்டவணை 2-17 2025 ஜனவரி முதல் யூன் வரை அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் செயற்பாடுகளின் கூற்று

ரூபா.பில்லியன்

விடயம்	ஜனவரி - யூன்		
	2024	2025	
	உண்மையான	மதிப்பிடப்பட்ட	உண்மையான
ஆரம்ப காசு மீதி	599.5	805.1	805.1
வருமானம் மற்றும் ஏனைய பெறுகை -களிலிருந்து மொத்த காசு உட்பாய்ச்சல்	1,812.3	2,267.9	2,275.1
மீண்டெழும் கொடுப்பனவு-களுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல்	-2,265.5	-2,918.9	-2,413.1
மூலதன கொடுப்பனவு-களுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல்*	-379.3	-450.9	-211.1
தேறிய காசு மிகை (பற்றாக்குறை)	-832.6	-1,101.8	-349.2
மொத்த பெறுகை*	1,665.3	1,681.9	1,675.9
படுகடன் மீள் கொடுப்பனவு	-749.0	-763.3	-945.2
தேறிய பெறுகை	916.4	918.6	730.7
முன்னைய ஆண்டின் வணிக கடன் பெறுகையின் இருப்பு	-	-	-
சீராக்கல் கணக்கு மீதி (தற்காலிக ஊழிய மீதி, தேறிய வைப்புக்கள், ஏனைய மாற்றல்கள் முதலியன)	-36.6	-	-106.9
முடிவுறுத்தல் காசு மீதி	646.7	621.8	1,079.7

மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
** 2025 யூன் 30 அன்றுள்ளவாறு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் கணக்கடப்பட்ட கருத்திட்ட / நிகழ்சித்திட்ட கடன்கள் உள்ளடங்கலாக*

இதற்கிணங்க, வருமான மதிப்பீட்டிலிருந்து 100.3 சதவீதத்தை அடைந்து கொள்ளும் ரூபா 2267.9 பில்லியன் மதிப்பீட்டிற்கு எதிராக, 2025 இன் முதல் ஆறு மாதங்களில், பொது திறைசேரிக்கு வருமானம் மற்றும் பிற வரவுகள் மூலம் கிடைத்த காசு உட்பாய்ச்சல்கள் ரூபா 2,275.1 பில்லியனாகும். இதற்கிடையில், 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், ரூபா 3,369.8 பில்லியன் மதிப்பீட்டிற்கு எதிராக, 2,624.3 பில்லியனாக மீண்டெழும் செலவினம் மற்றும் பொது முதலீட்டிற்கான காசுப் பாய்ச்சல் காணப்பட்டது. இது மதிப்பீட்டில் 77.9 சதவீதத்தை எட்டியுள்ளது. இதன்படி, 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 2,265.5 பில்லியனாக காணப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில், மீண்டெழும் செலவினம் மற்றும் பொது முதலீடுகள் இரண்டிற்குமான மொத்த காசு வெளிப் பாய்ச்சல் 6.5 சதவீதமான அதிகரிப்பினை பிரதிபலிக்கிறது. இந்த செலவின அதிகரிப்புக்கான காரணம் முதன்மையாக சம்பள உயர்வு மற்றும் சமூக நலச் செலவினங்களின் அதிகரிப்பு ஆகும்.

2025 ஜூன் 30 ஆம் திகதி நிலவரப்படி மொத்த ரொக்கப் பற்றாக்குறை ரூபா 349.2 பில்லியனாக இருந்தது, இது 2024 ஜூன் இறுதியில் நிலவிய ரூபா 832.6 பில்லியனுடன் ஒப்பிடும்போது 58.1 சதவீதம் குறைந்துள்ளது. 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில் வருமான மற்றும் பிற ரசீதுகளில் 25.5 சதவீதம் அதிகரிப்பு இதற்கு முக்கிய காரணம். மீண்டெழும் செலவினம் மற்றும் பொது முதலீடு மற்றும் மொத்த கடன் வாங்குதல் ஆகிய இரண்டிற்கும் மொத்த காசுப் பாய்ச்சல் குறிப்பிடத்தக்க மாறுபாட்டை பிரதிபலிக்கவில்லை என்றாலும், கடன் திருப்பிச் செலுத்துதல் முந்தைய ஆண்டை விட 26.2 சதவீதம் அதிகரித்துள்ளது. இது முக்கியமாக அதிகரித்த வருமானத்தின் ஒரு பகுதியை கடன் சேவை கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்துவதன் காரணமாக ஏற்பட்டதுடன், அவை சந்தை கடன்கள் மூலம் நிதியளிக்க ஒதுக்கப்பட்டன. அதன்படி, 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களின் இறுதியில் நேர்மறை காசு இருப்பு ரூபா 1,079.7 பில்லியனாக உள்ளது.

2.5 அரச படுகடன் முகாமைத்துவம்

2025 ஆம் ஆண்டிற்கான பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த கடன்பெறுகை வரையறை வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு மற்றும் வங்கி மறுமூலதனத்திற்கு நிதியளிப்பதற்கான ஏற்பாடுகள் உட்பட ரூபா 4,000 பில்லியன் ஆகும். 2025 சனவரி 01 முதல் ஜூன் 30 வரையிலான காலப்பகுதியில் அரசாங்க கடன்களின் பயன்பாடு ரூபா 1,494.5 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்காலப்பிரிவின் மொத்த கடன் பெறுகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கருத்திட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்ட கடன்கள் முறையே ரூபா 1,357.3 பில்லியன் மற்றும் ரூபா 137.5 பில்லியன் ஆகும். இது இந்த காலகட்டத்தில் கடன் மீள் கொடுப்பனவுகள் மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக பயன்படுத்தப்பட்டதாகும். அறிக்கையிடப்பட்ட திகதியின்படி, 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில் மொத்த கடன்களில் ஏறக்குறைய 90.8 சதவீதம் உள்நாட்டில் இருந்து பெறப்பட்டன. திறைசேரி முறிகள் உள்நாட்டு கடன் சேவை கொடுப்பனவுகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டன.

2025 சனவரி 1 முதல் ஜூன் 30 வரை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கடன் வரையறையின் பயன்பாடு ரூபா 1,357.3 பில்லியனாகப் பதிவாகியுள்ளதுடன், இது முக்கியமாக திறைசேரி முறிகள் மூலம் கடன்களைப் பிரதிபலிக்கிறது. இந்தக் காலகட்டத்தில் திறைசேரி உண்டியல்களின் வெளிப்படையான எதிர்மறை நிகர வெளியீடு, ரூபா 149.8 பில்லியன் புதிய வெளியீடுகளை விட வெளியேற்றங்கள் அதிகமாக இருப்பதைக் குறிக்கிறது. இது திறைசேரி உண்டியல் திருப்பிச் செலுத்துதலின் நிலுவையிலுள்ள அளவைக் குறைக்க பணப்புழக்க நிதி பயன்படுத்தப்பட்டதைக் குறிக்கிறது

அட்டவணை 2.18 மொத்த உள்நாட்டுக்கடன் பெறுகைகள் (2025 சனவரி - யூன்)

கருவிகள்	ரூபா.பில்லியன்
திறைசேரி பிணைகள்	1,357.3
மொத்தம்	1,357.3

மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

அட்டவணை 2.19 மொத்த உள்நாட்டுக்கடன் பெறுகைகள் (2025 ஜனவரி - யூன்)

கருவிகள்	ரூபா.பில்லியன்
திறைசேரி உண்டியல்கள்	(149.8)
மொத்தம்	(149.8)

மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

அட்டவணை 2.20 2025.06.30 வரை பொது திறைசேரியினால் வழங்கப்பட்ட திறைசேரி உத்தரவாதங்கள் மற்றும் ஆறுதல் கடிதங்களின் நிலுவையிலுள்ள பட்டியல்

தொடர் இல.	வங்கி அல்லது / நிறுவனத்தின் பெயர்	நிறுவனத்தின் பெயர்	2025.06.30 அன்றுள்ளவாறு வழங்கப்பட்ட மதிப்பு ரூ.மில்.		2025.06.30 அன்றுள்ளவாறு நிலுவைப் பெறுமதி ரூபா. மில்லியன்	
1	ஆசிய அபிவிருத்தி வங்கி	இலங்கை மின்சார சபை	119,986.96	134,985.33	90,452.17	105,450.54
		பிராந்திய அபிவிருத்தி வங்கி	14,998.37		14,998.37	
2	ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி	இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி	53,994.13	53,994.13	29,996.74	29,996.74
3	இலங்கை வங்கி	கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் லிமிடெட்	500.00	428,127.85	500.00	299,152.05
		இலங்கை மின்சார சபை	4,540.00		1,239.54	
		இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்	250.00		158.62	
		இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	100,000.00		77,724.75	
		சேர் ஜான் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்	835.00		35.83	
		மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை	200.00		80.21	
		லங்கா கோல் கம்பனி (பிரைவேட்) லிமிடெட்	49,500.00		13,087.29	
		தேசிய வணிக முகாமைத்துவ பாடசாலை	8,600.00		5,225.00	
		தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை	65,395.67		39,349.88	
		நோர்த்சீ லிமிடெட்	38.63		37.41	
		வீதி அபிவிருத்தி அதிகாரசபை	147,102.33		110,746.31	
		இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்	93.00		30.20	
		சிறீலங்கா ஏர்லைன்ஸ் லிமிடெட்	44,396.58		44,396.58	
		அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்	1,126.81		990.61	
		அரச பொறியியல் கூட்டுத்தாபனம்	2,400.00		2,399.99	
		மிஹின் லங்கா லிமிடெட்	3,149.84		3,149.84	
4	சீன அபிவிருத்தி வங்கி	இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி	49,497.80	49,497.80	60,209.46	60,209.46
5	சீனா தேசிய இராசாயன பொறியியல் இல. 14 நிர்மாண கொ. லிமிடெட்	கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் லிமிடெட்	13,131.07	13,131.07	7,100.23	7,100.23
6	கொமர்ஷல் வங்கி	இலங்கை மின்சார சபை	968.36	5,724.29	492.21	5,248.14
		இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்	4,755.93		4,755.93	
7	டிபி நம்பிக்கையாளர்கள் (ஹாங்காங்) லிமிடெட்	இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	52,494.30	52,494.30	52,494.30	52,494.30
8	டிஎப்சிசி வங்கி	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை	6,026.24	11,922.75	3,339.63	8,149.18
		வீதி அபிவிருத்தி அதிகாரசபை	5,896.51		4,809.55	
9	எக்ஸிம் வங்கி இந்தியா	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை	77,001.63	77,001.63	46,803.91	46,803.91
10	ஹற்றன் நெஷனல் வங்கி	விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட்	4,000.00	43,578.26	4,000.00	31,623.28
		இலங்கை மின்சார சபை	3,690.85		215.98	
		தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை	15,754.26		7,274.15	
		வீதி அபிவிருத்தி அதிகாரசபை	20,133.15		20,133.15	

தொடர் இல.	வங்கி அல்லது / நிறுவனத்தின் பெயர்	நிறுவனத்தின் பெயர்	2025.06.30 அன்றுள்ளவாறு வழங்கப்பட்ட மதிப்பு ரூ.மில்.		2025.06.30 அன்றுள்ளவாறு நிலுவைப் பெறுமதி ரூபா. மில்லியன்	
11	ஹொங்கங் மற்றும் ஷங்காய் வங்கி நிறுவனம் லிமிடெட்.	விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட்	13,239.95	13,239.95	8,849.04	8,849.04
12	சீனாவின் தொழில்துறை மற்றும் வணிக வங்கி லிமிடெட்	இலங்கை மின்சார சபை	12,590.35	12,590.35	7,958.14	7,958.14
13	ஐஎன்ஜி வங்கி, நெதர்லாந்தின் என்வி	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை	29,177.65	29,177.65	25,086.23	25,086.23
14	சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கம்	சிறீலங்கா ஏர்லைன்ஸ் லிமிடெட்	3,479.62	3,479.62	3,479.62	3,479.62
15	ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம்	விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட்	154,820.16	154,820.16	55,710.45	55,710.45
16	ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம்	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை	21,380.43	27,679.63	14,471.89	20,771.73
		வீதி அபிவிருத்தி அதிகாரசபை	6,299.21		6,299.84	
17	தேசிய சேமிப்பு வங்கி	இலங்கை மின்சார சபை	5,000.00	190,272.35	3,500.00	172,760.14
		சேர் ஜான் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்	33,896.09		31,474.94	
		தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை	32,710.61		27,106.37	
		வீதி அபிவிருத்தி அதிகாரசபை	114,415.66		108,994.82	
